Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

Soft View Computer Systems
For all your Computer Requirements
Computer Assembling & Sales
Maintenance, Repairing & Networking
Monitors, Printers, Scanners & UPS Repairing
Software Installations
CD Writing & Printing
No.778, Thaddatheru Junction, K.K.S Road, Jaffna, Sri Lanka
(சி-179) ☎ 021-2225170

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 கார்த்திகை 3 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 றமழான் 13 (19.11.2002) செவ்வாய்க்கிழமை இதழ் : 50

# வடக்கு-கிழக்கு அபிவிருத்திச் செயலகம் டிசம்பர் முதல் கிளிநொச்சியில் செயற்படும்!


(கிளிநொச்சி)

வடக்கு-கிழக்குப் பகுதிக்கான உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வு தேவைகளுக்கான உபகுழுவின் கூட்டம் நேற்று கிளிநொச்சி செயலகத்தில் நடைபெற்றது. காலை 10 மணிக்கு ஆரம்பமான கூட்டம் ஏழு மணி நேரமாக நடைபெற்றது. அரச தரப்புக் குழுவுக்கு பேணாட் குணதிலகவும், புலிகள் தரப்பிற்கு சு.ப.தமிழ்ச்செல்வனும் தலைமை தாங்கினர். அரசதரப்புக் குழுவில் எம்.டி.டி. பீரிஸ், எம்.ஐ.எம்.ராபீக் ஆகியோரும் புலிகள் தரப்பில் கலாநிதி மகேஸ்வரன், வே.பாலகுமாரன், பூவண்ணன், கௌசல்யன், திலக், ஆகியோரும் இச்சந்திப்பில் பங்குபற்றினர்.

நோர்வே அரசின் தரப்பில் வெஸ்ட்பேர்க் கலந்துகொண்டார். ஜப்பானிய அரசின் சார்பில் பிரதான ஆலோசகராக மொதோகிட் யோஷிகாவா பங்குபற்றினார். சந்திப்பு சுமுகமாகவும் இருதரப்பும் தமது திட்டங்களை முன்வைக்கக்கூடியதாகவும் அமைந்திருந்தது. இந்த உபகுழுவுக்கான நடவடிக்கைத் திட்டத்தை வரையவும் இதன் செயலகத்திற்கான நிதிக் கட்டமைப்பு ஏற்படுத்தவும் இருதரப்பும் இணக்கம் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து இருதரப்பும் புனர்வாழ்வு அபிவிருத்தி செயலகத்தின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் அதற்கான இயக்குநர் மற்றும் பிரதி இயக்குநர்கள் ஆகியோர் நியமனம் குறித்தும் ஆராய்ந்தனர். டிசம்பர் 15ல் செயலகத்தின் நடவடிக்கைகளை ஆரம்பிக்க இணக்கம் காணப்பட்டது.

இதன் நடவடிக்கைகளை கண்காணிக்கவும் கணக்காய்வுகளை மேற்கொள்ளவும் சர்வதேச நிறுவனங்களைத் தெரிவுசெய்ய எடுக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து இணக்கப்பாடு நேற்றைய சந்திப்பில் எட்டப்பட்டது. நவம்பர் 25 ஒஸ்லோ மாநாட்டில் இந்த உபகுழுவின் கோரிக்கை சமர்ப்பிப்பது குறித்து ஆராயப்பட்டதுடன் இதன் அடுத்த கூட்டம் டிசம்பர் 15,16 இலும் பின்னர் ஜனவரியிலும் நடைபெறும் எனவும் முடிவு எடுக்கப்பட்டது.

# மக்கள்மீது சூடு, தடியடி நெடுந்தீவில் பதற்றநிலை!





சந்திப்பில் கலந்துகொண்ட புலிகள் தரப்புப் பிரதிநிதிகள் - பூவண்ணன், பாலகுமாரன், தமிழ்ச்செல்வன், மகேஸ்வரன் ஆகியோரை மேற்படத்திலும், அரச தரப்புப் பிரதிநிதிகள் - பீரிஸ், பேணாட், ராபீக் ஆகியோரை கீழுள்ள படத்திலும் காணலாம். (மேலும் படங்கள் 9 ஆம் பக்கத்தில்)

## போராட்டம் தொடர்கின்றது

(நெடுந்தீவு)

**நெடுந்தீவில் முகாம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் ஈ.பி.டி.பியினருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் கடந்த மூன்று தினங்களாக நிலவி வந்த பதற்ற நிலையின் உச்சக்கட்டமாக நேற்று பொதுமக்கள் மீது துப்பாக்கித் தாக்குதலும் குண்டாந்தடியடிப் பிரயோகமும் நடத்தப்பட்டுள்ளது. இதில் மூன்று பொதுமக்கள் காயமடைந்தனர்.**

ஈ.பி.டி.பியினர் முகாம் அமைக்கும் முயற்சியைத் தடுத்து நிறுத்தும் வகையில் பொதுமக்கள் சுற்றி வளைத்திருந்தபோதும், நேற்று மேலதிகமாக அங்கு பொலிஸாரும் ஈ.பி.டி.பியினரும் படகில் கொண்டுவந்து இறக்கப்பட்டனர். காலை 9.10 மணியளவில் திடீரென பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டு வீச்சை நடாத்தியதுடன் தடியடிப் பிரயோகத்தையும் செய்தனர். வானத்தை நோக்கியும் பொதுமக்களை நோக்கியும் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

இதனால் பீதியடைந்த மக்கள் நாலாபுறமும் சிதறியோடினர். இவ்வாறு ஓடியவர்கள் விட்டுச்சென்ற சைக்கிள்களை பொலிஸார், பொலிஸ்

(10ஆம் பக்கம் பார்க்க)

# நெடுந்தீவுத் தரையிறக்கம் உடன்படிக்கையை மீறும் செயல்!

## தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

நெடுந்தீவில் ஈ.பி.டி.பியினர் தரையிறங்கிய செயல் சமாதான முயற்சி



களை குழப்புவதற்கும் யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு எதிரானதுமான செயலாகவே நாம் கருதுகிறோம்.

இவ்வாறு விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் நேற்று மாலை செய்தியாளர் மத்தியில் பேசும் போது தெரிவித்தார்.

மக்கள் எதிர்ப்புக்களையும் ஆர்ப்பாட்டங்களையும் ஈ.பி.டி.பியினருக்கு எதிராக நடாத்திக்கொண்டிருக்கும் வேளையில், ஓர் படை நடவடிக்கைபோல் ஈ.பி.டி.பியினர் நெடுந்தீவில் தரையிறங்கியுள்ளனர். இச்செயல் நிச்சயமாக யுத்தநிறுதத உடன்படிக்கைக்கு விரோதமானது. இவ்விடயத்தில் யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவினரும் அரசாங்கமும் துரித நடவடிக்கை எடுத்து மக்களுக்கு எதிரான நடவடிக்கையை நிறுத்த உதவ வேண்டும். மக்களின் விருப்பத்திற்கு மாறாகத் தரையிறக்கப்பட்ட ஈ.பி.டி.பியினர் அங்கிருந்து வெளியேற வேண்டும். இவ்விடயம் தொடர்பாகவும் நாம் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளோம் என்றும் தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.(க,லி)

## நெடுந்தீவுப் போக்குவரத்து தொடர்ந்து நேற்றும் பாதிப்பு

நேற்று நெடுந்தீவிற்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டி ருந்தது. அவசர தேவைக்கு புறப்பட்ட ஒரு தொகுதியினர் மட்டும் நேற்று படகில் குறிகட்டுவான் வந்து சேர்ந்தனர்.

நயினாதீவில் தங்கியிருந்த ஒரு தொகுதி நெடுந்தீவு மக்களும் நயினாதீவு கூட்டுறவு சங்கப் படகில் நெடுந்தீவுக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

### விண்ணானம் விநாசியா



சனத்திற்கு எப்ப நிம்மதியோ அண்டைக்குத்தான் சமாதானமும் நிரந்தரமாகும்.

# ஒஸ்லோவில் சமர்ப்பிக்க மதிப்பீட்டறிக்கை தயார்!

(கிளிநொச்சி)

வட-கிழக்கில் மேற்கொள்ளப்படவிருக்கின்ற அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் தொடர்பான தேவைகள் மதிப்பீடு செய்யப்பட்டு பூரணமான மதிப்பீட்டுத்திட்டம் ஒன்று விடுதலைப் புலிகளினால் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஒஸ்லோவில் நடைபெறவிருக்கின்ற உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தின்போது இம் மதிப்பீட்டறிக்கை அங்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

மேற்படி அறிக்கையில் - விடுதலைப் புலிகள் தரப்பாலும், விடுதலைப் புலிகளின் நிர்வாக அலகுகளாலும் இனங்காணப்பட்ட திட்டங்களின் மதிப்பீட்டு விபரம் உள்ளது. இதேபோல், அரச தரப்பினாலும் ஏனைய சர்வதேச நிறுவனங்களாலும் இனங்காணப்பட்ட அம்சங்களைக் கொண்ட அறிக்கைகளும் ஒஸ்லோ மாநாட்டின் போது முன்வைக்கப்படவிருக்கின்றன.

# புனர்வாழ்வு, புனரமைப்புக்கு அபிவிருத்தி நிதியம் அமைப்பு

(கிளிநொச்சி)

'வட, கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு, மற்றும் அபிவிருத்திக்கான நிதியம் ஒன்று உருவாக்கப்படவுள்ளது. நடுநிலையான சர்வதேச நாடுகள் பலவற்றின் பொறுப்பிலும், சர்வதேச சமூகத்தின் கண்காணிப்பின் கீழும் இந்நிதியம் செயற்படவுள்ளது.' இவ்வாறு கிளிநொச்சியில் நேற்றுநடைபெற்ற புனர்வாழ்வு புனரமைப்புக்கான உபகுழுக் கூட்டத்தின்முடிவில் பத்திரிகையாளர் மத்தியில் பேசிய விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப்



ஜப்பானியக் குழுவை வரவேற்கும் தமிழ்ச்செல்வன்

பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB
எமது முகாமைத்துவம் உள்நாட்டில் மட்டுமல்ல, சர்வதேசத்திலும் உள்ளது!
விமான சேவை
J/FT/P - 021- 2223896, 0777 - 801038,
CMB 505632 - 390128 - 517019
(சி-148)

# ஈ.பி.டி.பி. பலவந்தமாக அலுவலகம் திறப்பது

# உடன்படிக்கையை வலுவிழக்கச் செய்யும் சதி!

## யாழ். மாவட்ட அரசியல்துறை கண்காணிப்புக் குழுவிற்கு மகஜர்

நெடுந்தீவில் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஈ.பி.டி.பியினர் திரும்பவும் பலவந்தமாக தமது காரியாலயத்தைத் திறக்க முயற்சிப்பது சிங்களப் பேரினவாதிகளின் அடிவருடிகளான கடற்படையினரும், பொலிசாரும் ஈ.பி.டி.பியினரும் கூட்டாகச் சேர்ந்து புரிந்துணர்வு உடன்படிக்கையை வலுவிழக்கச் செய்வதற்கு மேற்கொள்ளும் சதியாகும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அனுப்பிய மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மக்களால் மக்களுக்காகவே ஜனநாயக ரீதியில் அங்கீகரிக்கப்பட்டதே ஒரு அரசியல் கட்சியாகும். ஆயுத முனையில் அரசியல் நடாத்தி வந்த ஈ.பி.டி.பி உறுப்பினர்களின் உண்மை நிலை உலகிற்கு தெரிய வந்துள்ளது. முக்கியமாகத் தீவகத்திலும் யாழ்.குடாநாட்டிலும் ஆயுத முனையில் அரசியல் நடாத்தி வந்தவர்களிடமிருந்து புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்பு அவர்களது சுயரூபம் வெளிவந்தது. புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்பு மக்களது வாய்ப்பூட்டுக்கள் களையப்பட்டன. ஈ.பி.டி.பியினர் மக்களிடம் இருந்து அந்நியப்படுத்தப்பட்டார்கள். நெடுந்தீவைப் பொறுத்தவரை இவர்களது அடக்குமுறையால் மக்கள் சொல்லொணாத் துயர்களை அனுபவித்து வந்தார்கள். இதன் பிரதிபலிப்பாக கிட்டத்தட்ட ஒரு மாதத்திற்கு முன்பாக நெடுந்தீவில் இவர்களது அலுவலகம் பொதுமக்களால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. இவர்கள் மக்களால் முற்றாக நிராகரிக்கப்பட்டு நெடுந்தீவைவிட்டு வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இது சமாதான உடன்படிக்கையின் பயனாக ஜனநாயகத்திற்கு கிடைத்த பெரும் வெற்றியாகும்.

ஜனநாயக ரீதியில் செயற்படுகின்ற மக்களால் அங்கீகரிக்கப்பட்ட கட்சி ஒன்று தனது அலுவலகத்தைத் திறப்பதற்கு, அதிகாலை மூன்று மணிக்கு ஊரெல்லாம் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் போது கடற்படையினருடனும் பொலிசாருடனும் கடற்படைப் படகுகள் மூலம் ஊரினுள் அரவமின்றி நுழைய வேண்டிய அவசியமில்லை. மக்களால் மேளதாளங்களுடன் வரவேற்கப்பட்டு அலுவலகம் திறக்கப்படுவதுதான் அக்கட்சியின் வளமான எதிர்காலத்திற்கு உரிய அறிகுறி. கத்தி, கோடரி, அலவாங்கு, கண்ணீர்ப்புகைக் குண்டுகள், மற்றும் ஆயுதங்கள்(துப்பாக்கிகள்) சகிதம் நுழைவது பாரிய யுத்த நிறுத்த ஒப்பந்த மீறலாகும். புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி மாற்றுக் குழுக்கள் ஆயதங்களுடன் நடமாடுவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. கடற்படையினரும் பொலிசாரும், இவர்களை ஆயுதங்களுடன் கூட்டிவந்து தரையிறக்கி அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கி வருவது பின்னணியில் பெரும் சக்தி ஒன்று செயற்படுவதைத் தெளிவாக்குகின்றது.

ஏற்கனவே இவர்களது கொடூரங்களால் பாதிக்கப்பட்டு, தமது விலங்குகளை உடைத்து, இவர்களைத் தமது பிரதேசத்தில் இருந்து வெளியேற்றி நிம்மதி மூச்சை அனுபவிக்க ஆரம்பித்தவேளை, இவர்களது சதி வலை மீண்டும் விரிக்கப்பட்டிருப்பது தம்மை சிக்கவைப்பதற்கென உணர்ந்த மக்கள், தமது இயல்பு வாழ்க்கையையும் பொருட்படுத்தாது இவர்களை வெளியேற்றுவதற்கான முழு முயற்சியில் ஓரணியாகத் திரண்டுள்ளனர். இதை நன்குணர்ந்த ஊர் காவற்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் 'அம்பாறை காஞ்சிரங்குடாவில் நடந்தது போலத்தான் இங்கும் நடக்கும்' எனக் கடுந்தொனியில் பொதுமக்களை விரட்டியுள்ளார். இக்கூற்றில் இருந்து இதன் பின்னணி எங்கிருந்து வருகிறது என்பது புலனாகின்றது. நெடுந்தீவுப் பொதுமக்களின் ஒன்றியத் தலைவர் அந்தோனிமுத்து தெரியப்படுத்தியிருக்கும் தரவுகளின் அடிப்படையில், தாங்கள் இதற்கு விரைவான நடவடிக்கை எடுத்து சமாதானச் சூழலிற்கும், மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும் எதுவித இடையூறும் ஏற்படாதவாறு பார்த்துக்கொள்வது தங்கள் கடமை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றோம்.

பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஒஸ்ரின் பெர்ணான்டோ கடற்படையினர் இது விடயத்தில் ஒதுங்கிக் கொள்ளவேண்டும் என்று அறிவுறுத்தியும் - கடற்படையினரும், பொலிசாரும் இதற்குத் தூபமிட்டு வருகின்றமையானது, பாரிய விளைவுகளை இது ஏற்படுத்தப் போகின்றது என்பதற்குரிய அறிகுறியாகும்.

எனவே, இவ்விடயத்தில் தாங்கள் விரைந்து செயற்பட்டு உரிய நடவடிக்கையை உடன் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். தவறின், நீண்டகாலமாகப் பேணப்பட்டு வரும் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை முறிவடையச் செய்து சகல சமாதான முயற்சிகளையும் தவிடுபொடியாக்கிவிடும் என்பதையும் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகின்றோம், என்று உள்ளது.

### தாக்குதலை தடுத்து நிறுத்துமாறு பிரதமருக்கு கடிதம்

நாட்டில் சமாதானமும், ஐக்கியமும் ஏற்படவேண்டி தங்கள் தலைமையிலான அரசும், விடுதலைப்புலிகளும் யுத்தநிறுத்தம் செய்து, பேச்சுவார்த்தை நடாத்தி, அதில் முன்னேற்றம் கண்டுவரும் இவ்வேளையில், நெடுந்தீவு வாழ் மக்கள் ஆயுதம் ஏந்திய குழு ஒன்றினால் தாக்குதலுக்குள்ளாவதையோ, அவர்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படுவதையோ உடன் தடுத்து நிறுத்தவேண்டும் என யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் பிரதமர் ரணிலுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது. இப்படியான அசம்பாவிதங்கள் பேச்சுவார்த்தையையும், சமாதான சூழலையும் பாதிக்கும். எனவே இவ்விடயத்தில் உடன் தலையிட்டு சுமுக நிலையை ஏற்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மாணவர் ஒன்றியம் வேண்டுகோள்

நெடுந்தீவுப்பகுதியில் மக்கள், ஈ.பி.டி.பியினராலும் கடற்படை மற்றும் பொலிசாரினாலும் தாக்கப்படுவதை தடுத்து நிறுத்தும் வகையிலும், அங்கிருந்து ஈ.பி.டி.பியினரை வெளியேறக்கோரியும் பொது நிறுவனங்களின் தலைவர்களினால் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிற்கு மகஜர்கள் கையளிக்கப்படவுள்ளது. இதன்பொருட்டு சகல பொதுநிறுவனங்களினதும் தலைவர்களையும் செயலாளர்களையும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைக்கு காலை 9.45 மணிக்கு வருமாறு யாழ்பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

### மதுபாவனையைக் கைவிட்டோருக்கு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மதுபோதைப் பழக்கத்தை கைவிட்டவர்களிற்கான உளவளத் துணைக் கருத்தரங்குகளை யாழ். மனித முன்னேற்ற நடுநிலைய நிறுவனம் நடாத்தி வருகிறது.

மதுப் பழக்கத்திலிருந்து மீண்டவர்களை இணைத்து, அவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் நோக்குடனும் அவர்களின் வாழ்வில் புத்துணர்வை ஏற்படுத்தும் நோக்குடனும், மேற்படி கருத்தரங்குகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

யாழ்.போதனா மருத்துவமனையும் மனித முன்னேற்ற நடுநிலைய நிறுவனமும் இணைந்து இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. (க)

## விளையாட்டு

### அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தி

# முத்தையா முரளிதரன் மூன்றாம் இடத்துக்கு!

இலங்கையின் நட்சத்திர சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் டெஸ்ட் கிரிக்கட் வரலாற்றில் அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய வீரர்களின் வரிசையில் மூன்றாவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

தென் ஆபிரிக்க அணிக்கு எதிராக செனட் யூரியனில் நடைபெற்று வரும் இரண்டாவது டெஸ்ட் கிரிக்கட் போட்டியின் மூன்றாம் நாளான நேற்றுமுன்தினம் முரளிதரன் இந்த இடத்தைப் பிடித்தார்.

முதலாவது இன்னிங்சில் தென்னாபிரிக்காவின் அன்ரூ போலின் விக்கெட்டை விழுத்தியதன் மூலம் இந்தியாவின் முன்னாள் சகலதுறை வீரர் கபில்தேவின் 434 மொத்த விக்கெட் இலக்கைச் சமப்படுத்திய முரளிதரன், தொடர்ந்து ஸ்ரீப் எல்பொத்தியின் விக்கெட்டை கைப்பற்றிய போது டெஸ்ட் போட்டிகளில் தாம் பெற்ற விக்கெட்டுகளின் எண்ணிக்கையை 435 ஆக அதிகரித்துக் கொண்டார். மூன்றாம் நாள் போட்டி முடிவில் கருத்து வெளியிட்ட முரளிதரன் -தற்போது தனக்கு 30 வயது என்பதால் இன்னும் நான்கு ஐந்து ஆண்டுகள் போட்டிகளில் விளையாடி, தன்னால் மேலும் சாதிக்க முடியும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

# கடற்பயணத்தின் மூலம் உடன்படிக்கை மீறப்பட்டது

## கண்காணிப்புக் குழு குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமக்கு அறிவிக்காது விடுதலைப்புலிகள் கடல்வழிப் பயணத்தை மேற்கொண்டதன் மூலம் உடன்படிக்கையை மீறியுள்ளதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கேணல் கருணாவும், கேணல் பதுமனும் கடந்த சனியன்று தன்னிச்சையாக புறப்பட்டுக் கடல் வழியாக கிழக்கு மாகாணம் சென்றுள்ளனர். சனியன்று கடல் கொந்தளிப்பாக இருந்தமையால் திங்கள் பயணத்தை தொடருவது என முடிவுசெய்த போதிலும் இவர்கள் தமது மெய்க்காவலர்கள சகிதம் அன்றைய தினமே கண்காணிப்புக் குழுவிற்கு அறிவிக்காது புறப்பட்டு சென்றுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இன்றைய நாள் இனிய நாள்

### 19-11-2002 - செவ்வாய்க்கிழமை

**சித்திரபானு வருடம் கார்த்திகை மாதம் - 3ஆம் திகதி**

*திதி* :- பூரணை
*நட்சத்திரம்* :- பரணி மாலை 6.24 வரை அதன்மேல் - கார்த்திகை
*ராகுகாலம்* :- 3.09 - 4.39
*சுபநேரம்* :- 10.39 - 12.09

**மேடம்** :- தேகசுகம் நன்று, மனமகிழ்ச்சி, தெய்வபக்தி, உடல் குளிர்ந்த உணவு, சாமர்த்தியமான சேவை, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**இடபம்** :- தேகசுகக் குறைவு, மனஅமைதி குறைவு, வீண் மனஸ்தாபம், கர்வத்தினால் தேவையற்ற செலவு, செய்தொழில் முன்னேற்றம், வியாபார நிலை சமம்.

**மிதுனம்** :- தேகசுகம் நன்று, மன மகிழ்ச்சி, நண்பர்கள் உறவு, தெய்வபக்தி, சமயநூல் கற்றல், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கர்க்கடகம்** :- தேகசுகம் நன்று, மன அமைதி, தெய்வ சேவையில் மதிப்பு, செய்தொழில் முன்னேற்றம், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் முன்னேற்றம்.

**சிங்கம்** :- தேகசுகம் நன்று, மனஅமைதி, தெய்வபக்தி, எதிரியின் தொல்லை குறைவு, கல்வி முன்னேற்றம், வியாபார நிலை சமம்.

**கன்னி** :- தேகசுகக் குறைவு, மனச்சஞ்சலம், எதிர்பாராத பயம், போக்குவரத்தில் நிதானம் வேண்டும், சொத்துக்கள் சம்பந்தமான பிரச்சினை, கல்வி நிலை சமம், வியாபார முன்னேற்றம்.

**யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்**
**அவர்களின் சகோதரரின் புத்திரர்**
**இ.வெங்கடேச ஐயர்.**

**துலாம்** :- தேகசுகம் நன்று, பணவரவு நன்று, மன அமைதி, தெய்வ பக்தி, உறவினர்கள், நண்பர்கள் உறவு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார நிலை சமம்.

**விருச்சிகம்** :- தேகசுகம் நன்று, மனநிறைவு, புதிய கடன், எதிரியின் தொல்லை குறைவு, கல்விநிலை சமம், வியாபார நிலைசமம்.

**தனு** :- தேகசுகம் நன்று, மனஅமைதி, தெய்வ சேவையில் புகழ், புத்திரரால் மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம், வியாபார நிலை சமம்.

**மகரம்** :- தேகசுகக் குறைவு, மனச் சஞ்சலம், வரவுக்கேற்ற செலவு, வீட்டில் செலவு, தேவையற்ற அலைச்சல், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கும்பம்** :- தேகசுகம் நன்று, மனமகிழ்ச்சி, விடா முயற்சி வெற்றி, ஆடையாபரண மகிழ்ச்சி, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**மீனம்** :- தேகசுகம் சமம், தேவையற்ற வாக்குவாதம், மனச் சஞ்சலம், அயலவர்களின் உறவு பேணப்படல் வேண்டும், வரவுக்கு மிஞ்சினசெலவு, கல்வி சமநிலை வியாபாரமுன்னேற்றம்


அழகற்ற பற்களா?
மிதப்புப் பற்களா?
பார்வைக் குறைபாடா?
கவலையை விடுங்கள்! நாடுங்கள்!!
எரிக் கனேஸ்
☆ மின்னிடும் மகத்தான சங்குப் பற்களைக் கட்டிடவும்
☆ மிதப்புப் பற்களுக்குக் கிளிப் போடவும்
☆ கண்களைப் பரிசோதித்துக் கண்ணாடி பெறவும்
☆ கட்டுப் பற்களைச் சுத்தம் செய்வதற்கான மாத்திரை பெறவும்
நாடுங்கள்
எரிக் கனேஸ்
564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P no. 2486

உங்கள் நாவுக்குச் சுவையூட்டும் எமது தயாரிப்புகள்
★ மாம்பழ சட்னி ★ மோர்மிளகாய் ★ கோடியல்
★ தேசி ஊறுகாய் ★ நெல்லிக்கிறஷ்
Jam (Mix Fruit, Mango, Wood Apple, Pine Apple, Tomato)
இயற்கையான பழங்களிலிருந்து அதி உன்னதமாகத் தயாரிக்கப்பட்டது.
இரசாயனக் கலவையற்றது.
உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்
ஜசுபி தொழிலகம்
மானிப்பாய் வீதி, உடுவில்.
தலைமையகம் -
சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்,
கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.

# கண்ணிவெடித் தடை உடன்பாட்டில் கைச்சாத்திடுமாறு 20 லட்சம் கையொப்பங்கள்

## - பிரமதர் ரணிலிடம் நேரில் கையளிக்க ஏற்பாடு -


(கொழும்பு நிருபர்)

கண்ணிவெடிகளைத் தடை செயயும் உடன்பாட்டில் இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் கைச்சாத்திட வேண்டும் எனக் கோரும் - இருபது லட்சம் பேர் கையெழுத்திட்ட மகஜர் எதிர்வரும் 30ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப் படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளைக் கண்ணிவெடிப் பாவனை ஒழிப்புக்கான சர்வதேச அமைப்பின் இலங்கைக்கான இணைத்தலைவர் வண.மாதம்பாகம அஸஜி தேரர் மேற் கொண்டுள்ளார்.

கண்ணி வெடிகளை அரசாங்கமும், புலிகளும் பாவிப்பதை தடை செய்யக்கோரும் மகஜருக்கு ஆதரவாக 20 லட்சம் கையொப்பங்கள் திரட்டப்பட்டிருப்பதாகவும், இது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரில் கையளிக்கப்படவுள்ளதாகவும், ஜனாதிபதி, யுனிசெவ் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கான பிரதிகள் அனுப்பி வைக்கப்படும் எனவும் வண. மாதம்பாகம அஸஜி தேரர் தெரிவித்துள்ளார்.

கண்ணிவெடித் தடை உடன்பாடு செய்து கொள்ளப்பட்டு எதிர்வரும் டிசம்பர் 2 ஆம் திகதி ஐந்து வருடங்கள் பூர்த்தியாவது குறிப்பிடத்தக்கது. (01)

## தமிழீழ மாவீரர் நாள் - நவம்பர் 27



எமது வீர சுதந்திர வரலாறு மாவீரர்களின் இரத்தத்தாலும், வியர்வையாலும், கண்ணீராலும் எழுதப்பட்டிருக்கின்றது.

வே. பிரபாகரன்
தமிழீழத் தேசியத் தலைவர்

### மத்தியவங்கி குண்டு வெடிப்பு

# ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட இருவர் மேன் முறையீட்டு மனு!

(கொழும்பு நிருபர்)

இலங்கை மத்திய வங்கிக் குண்டு வெடிப்புத் தொடர்பான வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவர், தமக்கு வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

கொழும்பு மேல் நீதிமன்றத்தினூடாக மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்படடுள்ளது. கதிர்காமத்தம்பி சிவகுமார் என்பவரால் இவ்வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, விக்னேஸ்வரநாதன் பார்த்தீபன் என்ற மற்றொரு நபர் இந்த வாரம் தனக்கு வழங்கப்பட்ட தீர்ப்பை ஆட்சேபித்து மேன் முறையீடு செய்யவுள்ளார்.

தனக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு நீதிக்குப் புறம்பானது என கதிர்காமத் தம்பி சிவகுமாரினால் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது. (01)

# சமாதானமான முறையில் உரிமைகள் வழங்கினால் சிங்கள தேசத்துடன் ஒற்றுமையாக வாழலாம்!

## - மட்டு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஸ் -

(அம்பாறை)

எமது உரிமைகள் சமாதானமான முறையில் வழங்கப்படுமானால் நாம் சிங்கள தேசத்துடன் ஒற்றுமையாக வாழமுடியும். ஆனால் சிங்களதேசம் எமது உரிமைகளை மறுக்குமானால் - மீண்டும் எமது மக்கள் மீது திணிக்கப்படும் போர்க் கரங்களையும், விலங்குகளையும் உடைப்பதற்கு, இராணுவ பலத்தினை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும் என நேற்று முன்தினம் அம்பாறையில் பயிற்சி முடித்து வெளியேறிய போராளிகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டு உரையாற்றிய மட்டு - அம்பாறை மாவட்டச் சிறப்புத் தளபதி ரமேஸ் தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும், இந்த வேளையில் நாம் இவ்வாறான நிகழ்வுகளை நடத்துவது போருக்கான சமிக்ஞையாகக் கொள்ளக் கூடாது. எமது உரிமை மறுக்கப் பட்டால் நாம் போராடத் தயார் என்பதன் வெளிப்பாடே இது.

நாம் போர் பிரியர்களோ சமாதானத்துக்கு விரோதமானவர்களோ அல்ல. போரினை நாம் விரும்பி ஏற றுக் கொள்ளவில்லை. நாம் போராடியே ஆக வேண்டும் என்று, காலம் தான் எமது கைகளில் ஆயுதங்களைத்தந்தது.

எமது படைப்பலம் தான் எமது வாழ்வைத் தீர்மானிக்கின்றது. நாம் எமது விடுதலையின் முதற்கட்டத்தில் நிற்கிறோம். பலவீனமான நிலையில் நாம் பேச்சுவார்த்தை மேசைக்குப் போகவில்லை. பலத்துடன்தான் பேசச் சென்றோம்.

நாம் பலமின்றி இருந்திருந்தால் சிங்கள தேசம் எமக்கு பேச்சுவார்த்தைக்கு நேசக்கரம் நீட்டியிருக்காது. எம்மீது தொடர்ச்சியான போரைத் தொடுத்திருக்கும்.

எனவே எமது படைப்பலத்தை நாம பெருக்கிக் கொள்ள வேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார். (08)

# மூடப்பட்ட வீதிகள் தொடர்பாக ஆராய நாளை மறுநாள் கூட்டம்

## கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் நடைபெறும்

(நமது நிருபர்)

யாழ்ப்பாணக் குடா நாட்டில் மூடப்பட்டிருக்கும் வீதிகளைப் போக்குவரத்துக்குத் திறப்பது மற்றும் உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக - இராணுவத் தரப்புக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நாளை மறுநாள் பேச்சுக்கள் இடம் பெறவுள்ளன.

முகமாலையில் கடந்த 16ஆம் திகதி இடம்பெற்ற யாழ். மாவட்டப் பாதுகாப்பு உப குழுவின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்குகமைவாக, இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகத்தில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில், அரசபடையினரின் தரப்புக்கு குடா நாட்டுக்கான படைத்தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவும், புலிகளின் பிரதிநிதிகள் குழுவுக்கு யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியும் தலைமை தாங்கவுள்ளனர்.

இருதரப்பிலும் தலா இருவர் பேச்சுக்களுக்கான பிரதிநிதிகளாகவும், தலா ஒவ்வொருவர் பார்வையாளராகவும் கலந்து கொள்வர் எனத் தெரியவருகின்றது.

இந்தக் கூட்டத்தில் யாழ்ப்பாணக் குடா நாட்டில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாகவும், படையினரால் தடை செய்யப்பட்டுள்ள வீதிகளைத் திறந்து போக்குவரத்துக்கு அனுமதிப்பது குறித்தும் விரிவாக ஆராயப்படும்.

குறிப்பாக பருத்தித்துறை - மருதங்கேணி வீதியைப் போக்குவரத்துக்குத் திறப்பது தொடர்பான நடைமுறைப் பிரச்சினைகள் குறித்து இக் கூட்டத்தில் விசேடமாக ஆராயப் படும் எனத் தெரியவருகின்றது. (க,லி)

### - ஜனாதிபதி சந்திரிகாவிடம் -

# சரத் சந்திரவை அமைச்சராக்க கோரி ரணில் வற்புறுத்து !

(கொழும்பு நிருபர்)

சரத் சந்திர ராஜகருணாவை அவசர சேவைகள் அமைச்சராக நியமிக்குமாறு கோரி ஜனாதிபதி சந்திரிகாவுக்கு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

முன்னதாக இந்த அமைச்சு தனது பொறுப்பில் இருப்பதால் சரத் சந்திர ராஜகருணாவுக்கு இப்பதவியை வழங்க முடியாதெனவும் வேறு அமைச்சுப் பொறுப்பினை வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்குவதாகவும் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்திருந்தார்.

இதன் பின்னரே சரத் சந்திர ராஜகருணாவுக்கு இவ் அமைச்சுப் பொறுப்பை வழங்கக்கோரி பிரதமரால் வற்புறுத்தப்பட்டுள்ளது.



### எதிர்க்கட்சித் தலைவர் அறையிலிருந்து

# வரவு-செலவுத் திட்ட யோசனைகள் அடங்கிய கோப்பு திடீர் மாயம்!

(கொழும்பு)

வரவு செலவுத் திட்ட விவாதத்தில் எதிர்க்கட்சிகளால் சமர்ப்பிக்கப் படவிருந்த திருத்த யோசனைகள் அடங்கிய கோப்பு காணாமற் போயுள்ளதாக தெரியவருகின்றது.

எதிர்க்கட்சித் தலைவரின் அறையில் வைக்கப்பட்டிருந்த இந்தக் கோப்பில் திருத்த யோசனைகள் இடம் பெற்றிருந்ததாகவும் இதனை நாடாளுமன்றத்தில் மங்களசமர வீர சமர்ப்பிக்க இருந்ததாகவும் தெரியவருகின்றது.

எதிர்க்கட்சித் தலைவரின் அறையில் இருந்து இந்தக் கோப்பு காணாமற் போனதற்கு உட்கட்சிச் சதி காரணமாக இருக்கலாம் என வும் பொ.ஐ.மு வட்டாரங்கள் சந்தேகம் தெரிவித்துள்ளன.

### மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிறவுண் வீதி- அரசடி வீதிச்சந்தியில் நேற்று முன்தினம் இரவு இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்டதில் 19 வயதான இளைஞர் ஒருவர் காயமடைந்தார். நல்லூரைச் சேர்ந்த கோபால் செந்தில்ராஜ் என்ற இளைஞரே காயமுற்ற நிலையில் யாழ். வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளவராவார்.

### புத்தளத்தில் பதற்றம் நீங்கியது

(புத்தளம்)

புத்தளம் மதுரங்குளியில் நேற்று முன்தினம் மாலை ஏற்பட்ட பதற்ற நிலை ஓரளவுக்குத் தணிந்துள்ளது. இங்கு தொடர்ந்தும் அறுநூறுக்கும் அதிகமான படையினரும் பொலிசாரும் காவலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (01)

# குடாநாட்டின் சகல பகுதிகளுக்கும் யாழ். நூலகத்தின் நடமாடும் சேவை!

## - யுனெஸ்கோ 2லட்சம் டொலர் உதவி -

(யாழ்ப்பாணம்)

யாழ்.நூலகத்திற்கு இரண்டு இலட்சம் அமெரிக்க டொலர் செலவிலான நிதியுதவியை வழங்குவதற்கு 'யுனெஸ்கோ' நிறுவனம் தீர்மானித்துள்ளது.

யாழ்.நூலகத்திற்கு தேவையான தொழிநுட்ப உதவிகளையும், குடா நாட்டு மக்கள் அனைவரும் நூலகத்தால் பயன் பெறத்தக்கதான 'நடமாடும் நூலக' வசதியையும் ஏற்படுத்திக் கொடுக்க இந்த நிதியுதவி பயன்படுத்தப் படவுள்ளது.

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள மாணவர்கள், வயோதிபர் இலலங்களில் வாழ்பவர்கள், சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருப்போர், வைத்தியசாலையிலுள்ள நோயாளர்கள் ஆகியோருக்கு உதவவே 'நடமாடும் நூலகம்' அமைக்கப்படவுள்ளதாக - யுனெஸ்கோ நிறுவனத்தின் பணபாட்டு விவகாரங்களுக்கான உயரதிகாரி பிரித்விராஜ் பெரேரா தெரிவித்துள்ளார்.

வரும் தைப்பொங்கல் தினத்தில் - புனரமைக்கப்பட்ட யாழ். நூலகம் மீண்டும் மக்கள் பாவனைக்குத் திறக்கப்படவுள்ளமை தெரிந்ததே.

### றமழான் தொழுகை நேரங்கள்

| | |
|---|---|
| ஸஹர் முடிவு | 4.57 |
| சுபஹ் | 5.12 |
| உதயம் | 6.32 |
| லுஹர் | 12.27 |
| அஸர் | 3.49 |
| மஃரிப் | 6.20 |
| இஷா | 7.33 |



இலங்கைக் கலைக் கழகத் தமிழ் இலக்கியக் குழுவின் சார்பில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற எழுத்தாளர் கௌரவிப்பு நிகழ்வில், துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை, எழுத்தாளர் தாமரைச் செல்விக்கு விருது வழங்கி கௌரவிப்பதை முதலாவது படத்திலும், ஏ.ஜே.கனகரட்னாவுக்கு கௌரவவிருது வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### மாவீரர் நாளுக்கு தயாராகும் சனசமூக நிலையங்கள்

(புலோலி)

எதிர்வரும் மாவீரர் நாளை அனுஷ்டிப்பதற்காக வடமராட்சிப் பகுதி சனசமூக நிலையங்கள் தயாராகி வருகின்றன.

பெரும்பாலான சனசமூக நிலையங்களில் அமைக்கப்பட்டிருந்த கொடிக்கம்ப மேடைகளை 2000ஆம் ஆண்டு இராணுவத்தினர் சேதமாக்கினர். மாவீரர் தினத்தை உணர்ச்சிபூர்வமாக அனுஷ்டிக்கும் நோக்கில் இவை புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன. (15)

### சேதமடைந்துள்ள அச்சுவேலி வீதி

(புலோலி)

அச்சுவேலி பிரதான வீதி சேதமடைந்து கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுகின்றது.

அச்சுவேலி பஸ் நிலையத்திற்கு அண்மையில் உள்ள இரு சந்திகளுமே போக்குவரத்துக்கு உதவாத நிலையில் பெரும் குன்றும் குழியுமாக காணப்படுகின்றன. இவற்றைச் சீர் செய்வதற்காக கற்கள் வீதியில் பறிக்கப்பட்டுள்ள போதும் எதுவித நடவடிக்கையையும் மேற்கொள்ளாது இருப்பதால் பெரும் போக்குவரத்துச் சீர்கேடு ஏற்பட்டுள்ளதுடன் இக்கற்களும் போக்குவரத்துக்கு இடையூறாக மாறியுள்ளன. (15)

### சிரமதானம் மூலம் செப்பனிடப்பட்ட வீதி

(வடமராட்சி கிழக்கு)

மருதங்கேணி - தாளையடி வீதி, கல்லடி வைரவர் கோவிலிலிருந்து மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை வரை சிரமதானப் பணி மூலம் செப்பனிடப்பட்டது.

வத்திராயன் கடற்றொழிலாளர் சங்க அங்கத்தவர்களால் சங்கத் தலைவர் பொ.தனபாலசிங்கம் தலைமையிலேயே இச்சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டது. (17)

### வல்வெட்டித்துறையில் நாய்களுக்கு "டிஸ்ரெம்பர்" நோய்

(வடமராட்சி கிழக்கு)

வல்வெட்டித்துறைப் பகுதிகளிலுள்ள நாய்களுக்கு "டிஸ்ரெம்பர்" எனும் நோய் பரவுவதற்கான அறிகுறிகள் தென்படுவதாக பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி எஸ்.வசீகரன் தெரிவித்துள்ளார்.

வைரஸ் கிருமிகள் எளிதில் பரவக் கூடுமாதலால் நாய்கள் வளாப்போர் அவற்றுக்கான தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (17)

வாழ்க வளமுடன்
நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்
அகவை இரண்டில்
HAPPY BIRTHDAY

பெயர் : வி.சாருகாந்
முகவரி: புத்தூர் கிழக்கு, புத்தூர்.
பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

#### நிமலராஜன் நினைவாக லண்டனில் கலந்துரையாடல்

# அபாயப் பகுதிகளில் பணிபுரியும் பத்திரிகையாளருக்கு காப்புறுதி!

### எல்லைகள் கடந்த பத்திரிகையாளர் அமைப்பு யோசனை

(லண்டன்)



நிமலராஜன்

படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் நினைவாகவும், அவரது சேவையை கௌரவிக்குமுகமாகவும் எல்லைகள் கடந்த பத்திரிகையாளர் அமைப்பு (ரிப்போர்ட்டேஸ் சான்ஸ் ஃபுரொன்ரெயர்ஸ்) நிமலராஜன் பௌண்டேஷனுடன் இணைந்து கலந்துரையாடலொன்றை ஒழுங்குசெய்துள்ளது. இக்கலந்துரையாடல் லண்டனிலுள்ள பத்திரிகையாளர் தேசிய சங்கத்தில் வரும் 25 ஆம் திகதியன்று நடைபெறவுள்ளது.

நிமலராஜனின் படுகொலை தொடர்பான விசாரணைகள் பற்றிய அறிக்கையும், அது தொடர்பாக- எல்லைகள் கடந்த பத்திரிகையாளர் அமைப்பும், டமோக்லிஸ் நெற்வேர்க் அமைப்பும் எடுத்துவரும் சட்ட நடவடிக்கைகள் பற்றியும் இக்கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளது.

'போரும் பத்திரிகையாளரும்' என்ற தலைப்பில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் அபாயப் பகுதிகளில் பணியாற்றும் பத்திரிகையாளர்களைப் பாதுகாப்பதற்கான காப்புறுதித் திட்டத்தையும் - எல்லைகள் கடந்த பத்திரிகையாளர் அமைப்பு முன்வைக்கவுள்ளது.

பி.பி.ஸியின் சிங்கள சேவையான 'சந்தேசிய'வின் பணிப்பாளர் பிரியத் லியனகே தலைமையில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் - 'சண்டே ரைம்ஸ்' சார்பில் செய்தி சேகரிக்கச் சென்ற போது காயமடைந்த மேரிகொலின், 'சற்றடே ரிவியூ'வின் முன்னாள் ஆசிரியர் எஸ்.சிவநாயகம், ஃபுரொண்ட்லைன் தொலைக்காட்சியைச் சேர்ந்த வாகன் ஸ்மித் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

# ரணில் கலந்து கொள்ளவிருந்த கூட்டத்தைக் குழப்பிய சிஹல உறுமய

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்துகொள்ளவிருந்த அங்கவீனமுற்ற படையினர் சங்கக் கூட்டத்தை சிஹல உறுமயவின் ஆதரவுடனான அங்கவீனமுற்ற படையினர் குழுவொன்று ஆர்ப்பாட்டம் நடத்திக் குழப்பியுள்ளது.

அங்கவீனமுற்ற படையினர் சங்கத்தின் கூட்டம் ஒன்று நேற்று நடைபெறவிருந்தது. இதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்துகொள்வதாக இருந்தது. ஆனால் முன்னாள் விமானப்படை அதிகாரியும் சிஹல உறுமய பிரமுகருமான ஒருவரின் தலைமையில், அங்கவீனமுற்ற படையினர் கூட்டம் நடைபெறவிருந்த இடத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இதனால் இக்கூட்டம் நடைபெறவில்லை. இது யுத்தத்தை ஆதரிக்கும் ஒருசில அங்கவீனமுற்ற படையினரைப் பயன்படுத்தி சிஹல உறுமய மேற்கொண்ட நடவடிக்கை என்றும், தமது சங்கம் யுத்தத்தை நிராகரித்து சமாதானத் தீவு முயற்சிக்குப் பூரண ஆதரவளிப்பதாகவும் அங்கவீனமுற்ற படைவீரர்கள் சங்கத் தலைவர் அசோக தயாரட்ண தெரிவித்தார்.

# மிதிவெடியை செயலிழக்கச் செய்த வெளிநாட்டவர் அது வெடித்ததில் காயம்!

### வன்னியிலிருந்து கொழும்பு கொண்டுசெல்லப்பட்டார்

(வவுனியா)

வன்னிப்பகுதியில் - கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த, கண்ணிவெடிகள் அகற்றும் அமைப்பொன்றின் மேற்பார்வையாளரான வெளிநாட்டவர் ஒருவர் - மிதிவெடி ஒன்றைச் செயலிழக்கச் செய்யும் பணியில் ஈடுபட்டபோது, அது வெடித்ததில் படுகாயமடைந்தார்.

இதுபற்றி ஐக்கிய நாடுகளுக்கான அபிவிருத்தித் திட்டம் (யு.என்.டி.பி.) விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

வன்னியில் இயங்கிவரும் மனிதாபிமான கண்ணிவெடிகள் அகற்றும் பிரிவுடன் இணைந்து பணியாற்றும் வெளிநாட்டு மேற்பார்வையாளர் ஒருவர் பி-4 மிதிவெடியொன்றைச் செயலிழக்கச் செய்யும்போது அது வெடித்ததில் படுகாயமடைந்தார்.

இரண்டு கைகள், முகம் மற்றும் மார்புப் பகுதியில் காயமடைந்த இவர், உடனடியாக மல்லாவியிலுள்ள வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டு - அங்கு பணியாற்றும் பிரெஞ்சு மருத்துவர் குழுவினரால் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டார்.

பின்னர், ஹெலிகொப்ரர் ஒன்றின் மூலம் - கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கு அப்பலோ மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவித்த யு.என்.டி.பி, குறிப்பிட்ட நபருக்கு சிகிசசையளிப்பதில் அனைத்துத் தரப்பினருமே - அர்ப்பணிப்புடன் சேவையாற்றியதற்கும் நன்றி தெரிவித்துள்ளது.

# நீதியான - கௌரவமான சமாதானத்தையே தமிழ்மக்கள் ஒரேகுரலில் வேண்டி நிற்கின்றனர்

### தமிழர் விடுதலைக்கூட்டணி மத்திய குழுவில் தீர்மானம்

(கொழும்பு)

நோர்வேயின் அனுசரணையுடனான சமாதான முயற்சிகளை வரவேற்றும் தமது மனப்பூர்வமான ஆதரவைத் தெரிவித்தும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கூட்டணிச் செயற்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது,

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழு கடந்த ஞாயிற்றுக்கிழமை கூடி, நோர்வே நாட்டு அனுசரணையுடன் ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கும் - தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையே நடைபெறும் பேச்சுவார்த்தை மற்றும் சமாதான நடைமுறைகள் பற்றி விரிவாக ஆராய்ந்தது.

சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்வதில் பாராட்டக்கூடிய விதத்தில் நடுநிலைத் தன்மையை பேணி, சிறந்த முறையில் பங்காற்றி வரும் நோர்வே அரசாங்கத்திற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி தனது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றது. நோர்வே அரசாங்கத்தின் பங்களிப்புத்தான் இருதரப்பினரையும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவந்துள்ளது என்பதையும், இருதரப்பினருக்கும் இடையே பரஸ்பர நம்பிக்கையைக் கட்டி எழுப்புவதற்கு உதவியது என்பதையும், நீதியானதும் கௌரவமானதுமான சமாதானத்தைக் காண வேண்டும் என்ற இதயபூர்வமான திடசித்தத்துடனும் அந்த நோக்கத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து இருதரப்பினரும் பேச்சுவார்த்தைகளை நடத்துவதன் மூலம் முழு நாட்டுக்கும்-உலகுக்கும் தெளிவுபடுத்த உதவியுள்ளது என்பதை தமிழர் விடுதலைக் கூட்டணி அழுத்தமாகக் கூறிவைக்க விரும்புகின்றது.

சமாதான நடைமுறை உறுதியுடன் மேற்கொள்ளப்படுவதற்கு சர்வதேச சமூகத்திடமிருந்து கிடைத்த அங்கீகாரந்தான், யுத்தத்தினால் அழிவுற்ற வடக்கு-கிழக்கை புனர்நிர்மாணம் செய்வது, உள்ளூரில் இடம் பெயர்ந்த பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களையும் ஏனைய அகதிகளையும் மீளக்குடியமர்த்துவது, அவர்களுக்கு புனர்வாழ்வளிப்பது ஆகிய திட்டங்களுக்கு உதவி வழங்குவது குறித்துப் பரிசீலனை செய்வதற்காக இம்மாதம் ஒஸ்லோவில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் பங்குபற்ற சர்வதேச சமூகம் உடனடியாக முன்வந்ததற்கான காரணம் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்மக்கள் ஒரேகுரலில் நீதியானதும் கௌரவமானதுமான சமாதானத்தை வேண்டி நிற்கின்றனர். சமாதான நடைமுறைகளைப் பாதிக்கக் கூடியதான ஒரு பக்கச்சார்பான அறிக்கைகளை விடுக்கின்ற தமிழ்த் தரப்பினரை, அவ்வாறு அறிக்கைகளை வெளியிடுவதை தவிர்க்கும்படி தமிழர் விடுதலைக் கூட்டணி வேண்டுகின்றது, எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சின்னஞ்சிறு செய்திகள்

### கதிர்காமரை சந்தித்தார் வெஸ்ட்பேர்க்

(கொழும்பு)

சமாதான முயற்சிகள் தொடர்பான காட்டமான விமர்சனங்களை ஜனாதிபதி சந்திரிகாவும், முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் வெளியிட்டது பற்றி உண்மையான நிலவரத்தை அறிய நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்ட்பேர்க் லக்ஷ்மன் கதிர்காமரை நேரில் சந்தித்துள்ளார்.

### இந்து சமய குருபீடம் யாழ்ப்பாணத்தில் அமையும்

(கொழும்பு)

இந்து சமயக் குருக்களை உருவாக்குவதற்கான குருபீடம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்தப் பீடம் எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படுவதுடன் பயிற்சிநெறிகளுக்கு மாணவர்களை அனுமதிக்கப்படவுள்ளதாக இந்து கலாச்சார அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.பரமலிங்கம் தெரிவித்தார்.

### விழிப்புக்குழுவிடம் சிக்கிய திருடர்கள் குழு!

(சிறுப்பிட்டி)

ஆவரங்கால், புத்தூர், சிறுப்பிட்டிப் பகுதிகளில் நீண்ட காலமாகத் தமது கைவரிசையைக் காட்டிய திருடர் கோஷ்டியினரை - நேற்றுமுன்தினம் ஆவரங்கால் பகுதி விழிப்புக்குழுவினர் மடக்கிப் பிடித்தனர்.

மேற்படி திருடர் கோஷ்டியினர் சம்பவதினத்தன்று - கடையொன்றில் உணவு வாங்குவதற்கு விசாரித்து விட்டு வெளியேறிச் சென்று கொண்டிருந்த போது ஆவரங்கால் பகுதியில் வைத்துப் பிடிக்கப்பட்டனர்.

ஏழு பேர் கொண்ட குழுவினரில் ஒருவர் தப்பியோடிவிட்டார். மிகுதி ஆறு பேரும் நேற்று ஆவரங்கால் பஸ் தரிப்பு நிலையத்தில் மக்கள் பார்வைக்காக கட்டி வைக்கப்பட்டனர். பின்னர் விசாரணைகளின் பொருட்டு விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். (78,110)

### எயிட்ஸ் விழிப்புணர்வு பிரசாரம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மாணவர் பேரவையின் அனுசரணையுடன் மருத்துவ பீடத்தின் சமுதாய மருத்துவத்துறையினர் எயிட்ஸ் விழிப்புணர்வுத் துண்டுப்பிரசுரம் ஒன்றை மக்களுக்கு விநியோகித்து வருகின்றனர்.

A-9 பாதை திறக்கப்பட்டபின் வெளிநாடுகளிலிருந்தும் தென் பகுதிகளிலிருந்தும் பல சுற்றுலாப் பயணிகள் யாழ். குடாவிற்கு விஜயம் செய்கின்றனர்.

இவ்வாறானவர்களில் எயிட்ஸ் நோயாளிகளும் இருக்கலாம். இதனால் இவர்கள் இங்கேயும் தமது நோயினைப் பரப்ப முடியும். எனவே மக்களை விழிப்புடன் இருந்து எயிட்ஸ் ஆபத்திலிருந்து தம்மைப் பாதுகாக்குமாறு சமுதாய மருத்துவத் துறையினர் விழிப்புணர்வுப் பிரச்சாரத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

### கரவெட்டியில் 50 குடும்பங்களுக்கு மலசலகூட வசதி

(வடமராட்சி)

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள வறுமைக் கோட்டிற்குட்பட்ட, மலசலகூட வசதிகளற்ற 50 குடும்பங்களுக்கு யுனிசெவ் நிறுவனத்தினால் மலசல கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

கரணவாய் கிழக்கில் 9 குடும்பங்களுக்கும், கரவெட்டி வடக்கில் 19 குடும்பங்களுக்கும், கரவெட்டி தெற்கு - மேற்கு பகுதியில் 22 குடும்பங்களுக்கும் இவ் உதவிகள் கிடைக்கவுள்ளன.(23)







# சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த சார்லி சாப்ளின்

**அரங்கம் 08**

நிர்வாகத்தில் மாற்றமேற்பட்டதால் "ஹோம்ஸ்" நாடகத்தின் மூன்றாவது சுற்றுப் பயணம் மோசமான வியாபாரத்தில் முடிந்தது. சார்லி ஒரு தந்தியால் காப்பாற்றப்பட்டான். பிரபல அமெரிக்க நடிகர் வில்லியம் கில்லட்டுடன் நடிக்க சார்லிக்கு ஒரு வேடம் தரப்பட்டது. அந்த நாடகம் தோல்வியடைந்தாலும் கில்லட்டுக்கு சார்லியின் நடிப்பு மிகவும் பிடித்துப் போக, புதிய தயாரிப்பான ஷெர்லக் ஹோம்ஸில், அவனுக்குப் பில்லி என்ற வேடம் அளித்தார். அதற்கு லண்டனின் மேற்குப் பகுதிக்குச் செல்ல வேண்டியதாயிருந்தது. அப்போது சார்லிக்கு வயது பதினாறு தான்.



சார்லி கில்லட்டிடமிருந்து நிறையக் கற்றுக் கொண்டான். அவர் அருமையான நடிகர். பொறுமையான ஆசான். நிஜ வாழ்க்கையை கவனிப்பதன் மூலந்தான் மேடை நாடகங்கள் வளரும் என்று அவர் நம்பினார். இதை ஹன்னாவும், சார்லியும் நன்றாகவே புரிந்து கொண்டார்கள்.

ஆனால் ஹன்னாவுக்கு முன்னேறும் வாய்ப்பு இருக்கவில்லை. அது நாள் வரை அவள் போராடி வந்த மனநோய் மீண்டும் அவளைத் தாக்கியது. முன்னெப்போதும் இல்லாத தீவிரத்தோடு அவளுடைய மகன்கள் அந்த சமயத்தில் வெளியே சென்றிருந்தார்கள். நண்பர்கள் அவளை மனநோயாளிகளின் காப்பகத்திற்கு அழைத்துச் சென்றனர். இம் முறை, அவள் தேறுவது கடினம். அவள் தெளிவாக இருந்த நேரங்களில் மகிழ்ச்சியுடன் இருக்க முயன்று, தன் மகன்களுக்குத் துணிவு தரும் கடிதங்களை எழுதினாள். அதில் தன் அன்பைத் தெரிவித்துக்கொண்டாள்.

சிட்னி இப்போது 'ரிப்பேர்ஸ்' என்ற பொழுதுபோக்கான நாடகத்தில் நடித்துக் கொண்டிருந்தான். அதில் நிறைய தண்ணீர், ஏணிகள், பக்கற்றுகள், பசை, காகிதம் மற்றும் விழுதல்கள் இடம்பெற்றிருந்தன. "ஷெர்லக் ஹோம்ஸ்" இன் முடிவில் சார்லியும் அவனுடன் சேர்ந்து கொண்டான்.

சார்லிக்குத் தொழில் ரீதியாக எல்லா விவகாரங்களுமே வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தன. உடனேயே அவன் உச்சத்தை அடைந்து அடிவானத்துக்கும் மேலே செல்லத் துடிப்பவன்போல் தெரிந்தான். சிறிது காலத்துக்கு அவன் "கேஸியின் நீதிமன்ற வித்தைகள்" என்ற பிரபல நாடகத்தில் நடித்தான். பார்வையாளர்கள் அவனை மிகவும் விரும்பினர். முக்கியமாக அவன் மேடையில் ஓடி, மூலைகளில் வழுக்கி விழாமல் இருக்க ஒரு காலைத் தூக்கி தன்னை நிலைப்படுத்திக் கொண்டதை எல்லாம் மிகவும் ரசித்தார்கள்.

ஆனால் வெற்றிகளைப் பேரிழப்புக்கள் தொடரும் வாய்ப்பு உண்டு. நம்ப முடியாத வகையில் சார்லி யூதர்களின் பொழுதுபோக்கு கலைஞனாக தன்னை அமைத்துக் கொண்டான்.

அதனால் பார்வையாளர்களின் கூச்சல் ஆர்ப்பாட்டங்களுக்கிடையே மேடையிலிருந்து விரட்டி யடிக்கப்பட்டான். இது போன்று அவன் தாய்க்கு நேர்ந்ததை அவன் பார்த்திருக்கிறான். ஆனால் அவனுக்கோ இது ஒரு புது அனுபவம். அவன் நடுங்கியபடி மேடையின் உட்புறம் நின்றிருந்தான். அதன் பிறகு அவன் நேர்முக பார்வையாளர்களின் முன் சந்தோசமாக நின்றதே இல்லை.

இப்போது சார்லியை காப்பாற்றுவது, சிட்னியின் முறை. அவன் ப்ரெட்கர்னோவின் வெற்றிப் படைப்பான 'சைலண்ட் காமெடியன்ஸில்' வளரும் நட்சத்திரம். முதலாளியிடம் பேசி சார்லியை சம்பளமில்லாமல் இரண்டு வாரங்களுக்கு முயற்சி அடிப்படையில் குழுவில் சேர்த்துக் கொள்ள சம்மதிக்க வைத்தான்.

சார்லிக்கு ஒரு துணைப் பாத்திரம் கொடுக்கப்பட்டது. இது மிகப் பெரிய வாய்ப்பு என்பதை அவன் நன்றாகவே அறிந்திருந்தான். அவனிடம் சொல்லப்பட்ட ஒவ்வொரு விஷயத்தையும் துல்லியமாகவும், நேர்த்தியாகவும் செய்ததோடு அதில் யாரும் எதிர்பாராத சின்னச்சின்ன வித்தைகளையும் சேர்த்துக் கொண்டான். அவனுடைய இந்த நடிப்பு, அங்கிருந்த பெரிய நடிகர்கள் பேசும் அருமையான வரிகளை விடவும் பிரமாதமாக அமைந்து பார்வையாளர்களை மகிழ்வித்தது. இதனால் பிற கலைஞர்களைக் கவர முடியாது போனாலும் "கர்னோ" சார்லியின் திறமையை நன்கு புரிந்து கொண்டு அவனை தன் நாடகக் குழுவில் சேர்த்துக் கொண்டார்.

(அடுத்த அரங்கில் தொடரும்)

# தன் சொந்த இனத்தவரால் கொல்லப்பட்ட பனி மனிதன்



அல்பைன் பனிமலையில் மீட்கப்பட்ட-5000 வருடங்களுக்கு முன் வாழ்ந்த மனித மூதாதையர் குறித்த மர்மங்கள் கடந்த 14ஆம் திகதி முதல் சிறிதுசிறிதாக அவிழத் தொடங்கியுள்ளது. **Oetzi** என்று இந்த பனிமனிதனுக்கு விஞ்ஞானிகள் பெயரிட்டுள்ளனர். இவன் எவ்வாறு இறந்தான் என்பது குறித்துக் கடந்த பல மாதங்களாக விஞ்ஞானிகள் ஆராய்ந்து வந்தனர்.

1991இல் இத்தாலிய அல்பைன் மலையில் பனி படர்ந்த நிலத்தடியிலிருந்து இம்மனிதனின் சடலம் தற்செயலாக சில ஆய்வாளர்களால் கண்டெடுக்கப்பட்டது. இவனின் உடல் அருகே கோடரி, அம்புகள் என்பனவும் காணப்பட்டன.



கடந்த 10 வருடங்களாக இச்சடலம் குறித்து ஆய்வு செய்து, இவன் எதிர்திசையிலிருந்து ஏவப்பட்ட அம்பு ஒன்றினாலேயே கொல்லப்பட்டான் என்பதைக் கண்டறிந்துள்ளனர். பல வருடங்களாக உறைபனியில் இச்சடலம் இருந்ததால், சடலம் கெட்டுப் போகாது இருந்தது. இதனால் சடலத்தில் பல தடயங்கள் தெளிவாக தெரிவதாக கூறப்படுகிறது. அம்பு துளைத்த அடையாளம் நெஞ்சுப் பகுதியில் காணப்படுவதாகவும், தொடர்ந்து செய்யப்பட்ட ஆய்வுகளில் இருந்து இவனை கொன்றவன் யார் என்பதைக் கண்டறிந்துள்ளதாகவும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இது குறித்து ஆராய்ந்த இத்தாலியின் திரென்ரோ பல்கலைக்கழக பேராசிரியர் அனலூசியா, "அம்பின் முனை முக்கோண வடிவமாகக் காணப்படுகிறது. தென் அல்ப் மலைவாசிகள் இத்தகைய அம்புகளையே உபயோகிப்பர். இவர்களது எதிரிகளாகக் கருதப்படும் வட அல்ப்வாசிகள் பயன்படுத்துவது தட்டை வடிவிலான முன்முனையை கொண்ட அம்புகளாகும். எனவே முக்கோண வடிவிலான அம்பினாலேயே இவன் கொல்லப்பட்டிருப்பதால் இவன் தனது சொந்த இனமக்களினாலேயே கொல்லப்பட்டிருக்கின்றான்" எனக் கூறினார். இது குறித்து மேலும் அறிய பொறுத்திருக்க வேண்டியுள்ளது. ஏனெனில் அடுத்த வருட நடுப்பகுதியில் இச்சடலம் அறுவைக்கு உட்படுத்தப்பட்டு உள்ளே சிக்கியிருக்கும் அம்பின் முனைப்பகுதி வெளியில் எடுக்கப்பட்ட பின்பே தெளிவான முடிவுகளுக்கு வரமுடியும்.

# எண்ணெய் கப்பல் ஒழுக்கு பறவைகளுக்கு அச்சுறுத்தல்




ஸ்பானியக் கடலில் சிதைவடைந்த நிலையில், தற்போது இழுத்து செல்லப்பட்டு கொண்டிருக்கும் பாரிய எண்ணைக் கப்பலினால் ஸ்பெயினின் பெறுமதிமிக்க பறைவையினங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. 'பிரிஸ்ரீஜ்' எனும் இந்த எண்ணெய் கப்பலில் ஏற்பட்ட உடைவினால் 32 கிலோ மீற்றர் நீளத்துக்கு கடலில் எண்ணெய் சிந்தியுள்ளது. லத்வியாவிலிருந்து ஜிப்ரோல்டர் நோக்கிச் சென்ற இக்கப்பல் ஸ்பெயின் அருகே புயலில் சிக்கிச் சேதமடைந்தது.

புலம்பெயர் பறவைகளின் பிரதான சரணாலயமாக இப்பகுதி விளங்குகிறது. தெற்கு நோக்கி, உகந்த காலநிலையைத் தேடி பறக்கும் இந்த அரிய பறவைகள் இக் கடலின் பாறைகளில் சிறிது ஓய்வெடுத்த பின்பே தொடர்ந்து பறந்து செல்வது வழக்கம். இக்கடலில் பல்வகை மீனினங்கள், சிப்பிகள், போத்தல் மூக்கு டொல்பின்கள் என்பன வசிக்கின்றன. இந்த உயிரினங்களுக்கும் எண்ணெய் ஒழுக்கினால் பாரிய பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. கடலில் கலந்துள்ள எண்ணெய்க் கசிவுகளை அகற்ற பாரிய பம்பிகளை சர்வதேச எண்ணெய்க் கழிவுகளுக்கான நிறுவனம் பயன்படுத்தி வருகின்றது.

# பிரிட்டிஷ் சுறாக்களுக்கு அடித்தது யோகம்



பிரிட்டிஷ் கடலில் காணப்படும் பாரிய சுறாக்களை பாதுகாப்பது என அந்நாட்டரசு முடிவு செய்துள்ளது. பாஸ்கிங் சுறா **(basking shark)** பாதுகாக்கப்பட வேண்டிய உயிரினப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. இச்சுறாவிலிருந்து எடுக்கப்படும் பதார்த்தங்கள்- பல மருந்துகள், பூச்சுகள், உணவு என்பவற்றுக்கு உபயோகிக்கப்படுவதாலேயே இந்த வகை சுறாக்கள் மனிதனின் அச்சுறுத்தலுக்குட்பட்டன. இதே போன்ற பாதுகாப்பை உலகின் பெரிய மீனான திமிங்கிலச் சுறாக்களுக்கும் **(Whale Shark)** வழங்க விலங்குகள் பாதுகாப்பு குழுவினர் முடிவு செய்துள்ளனர்.

# இறந்த டைனசோர்கள் 'உயிருடன்' அசையும்



பலகோடி ஆண்டுகளுக்கு முன இறந்தழிந்து போன டைனசோர் விலங்குகளை உயர் தொழில்நுட்ப முறைமூலம் மீண்டும் "உயிர்" கொடுத்து அவை இயங்குவது போல் காட்ட அமெரிக்க விஞ்ஞானிகள் முயன்றுள்ளனர். இத்திட்டத்திற்கு டைனசோர்கள் மண்டையோட்டுடன் முப்பரிமாண கொம்யூட்டர் வரைகலையையும் இணைக்கவுள்ளனர். இதன் மூலம் தொல்பொருள் காட்சியகங்களில் வெறும் எலும்புகளாக டைனசோர்களைப் பார்வைக்கு வைக்காது அவை உயிரோடு இருந்தபோது எவ்வாறு செயற்பட்டன என்பதை காட்டுவதாக டைனசோர்களை உருமாற்றி வைக்க முடியும் என விஞ்ஞானிகளில் ஒருவரான ஒலிவர் பிம்பர் கூறுகிறார்.



இவ்வகையிலான பரிசோதனை ஒன்றை, கொடூரத்தாடையுடையது எனக்கூறப்படும் **Deinonychus** என்ற டைனசோரின் மண்டையோட்டில் பிரயோகித்து அதை பயங்கரமாக அசைய வைத்து பார்வையாளர்களை கிலி கொள்ளவைத்துள்ளார் இவர்.

# தாயின் கருவறைக்குள்...



முட்டையும் விந்தணுக்களும்

கருவுறாத பெண்ணின் முட்டையைச் சுற்றி நூற்றுக் கணக்கான விந்தணுக்கள். இதில் ஒரு விந்தணு மட்டுமே முட்டையின் சுவரை உடைத்து உட்சென்று முட்டையைக் கருவுறச் செய்யும்.



ஆரம்பநிலை முளையம்

இந்த முளையம் நான்கு நாள் வயதுடையது. இன்னும் சில நாட்களில் இந்தக் கலங்களில் சில, குழந்தையாக மாறும் மற்றைய கலங்கள் இழையங்களாகவும் சவ்வுகளாகவும் மாறி இந்த முளையத்தைப் பாதுகாக்கும்.



28 நாள் கரு

ஒரு மாத நிறைவில் "தலை"ப் பகுதியில் கண், காது போன்றவற்றுக்கான தடயங்கள் தோன்றும். முன்னாண் முதல் முறையாக உருவாகிறது. இது நரம்புக் குழாயாகவே ஆரம்பத்தில் இருக்கும்.



32வது நாள்

மூளை விரைவாக வளரும். மூளை 18 ஆம் நாளில் இருந்து உருவாகித் தொடர்ந்து வளர்ந்து வருகிறது.



44வது நாள்

அரை அங்குல நீளமான சிசு, விருத்தியடைந்து வரும் மூளைக்கு அதிக குருதி விநியோகம் கிடைக்கின்றது. கை, கால்கள் தோன்றியுள்ளன. கையில் விரல்கள் முளைக்கும் தடயங்கள் தோன்றியுள்ளன.



54வது நாள்

மனிதக்குழந்தை எனக் கருதக்கூடியளவு தோற்றம் பெறுகிறது. காது, மூக்கு தெளிவாக உருப்பெறுகிறது. நான்கு அறை இதயம் இரத்த விநியோகத்திற்காக தயாராகிறது.



10 வாரங்களில் ..

நகங்கள் முளைக்க ஆரம்பிக்கின்றன. ஈரல், சதைய உட்பட உடல் உள்ளுறுப்புகள் பெரும்பான்மையானவை இயங்க ஆரம்பித்து விடுகின்றன. கரு வளர்ச்சி வேகமடைகிறது. தோலில் தொடுகையுணர்வும் ஏற்பட்டு விடுகிறது.



28 வாரங்களில்..

வெளியுலகில் தப்பிப்பிழைத்து வாழத் தகுதிபெற்று விடுகிறது. எனினும் நுரையீரல், சமிபாட்டுத் தொகுதி என்பன முற்றாக உருப்பெற்றிருக்க மாட்டாது. இக்காலப் பகுதியில் பிறக்கும் சில குழந்தைகள் தப்பிப் பிழைத்து விடுவதுமுண்டு.

# கணவன் — மனைவி உறவில் அடிக்கடி தோன்றும் விரிசல்கள்

கணவன் - மனைவிக்கிடையில் அடிக்கடி உறவுகள் முறிவடைகின்றன. இதற்கு பல காரணங்கள் உள்ளன.

சிலகாலம் கணவன் - மனைவிக்கிடையில் உறவு முறிந்திருந்தால் அவர்களிடம் அதற்கான காரணம் என்னவென்று கேட்டால், என்னை கணவன் புரிந்துகொள்ளவில்லை என்பார். என்னைப் பிழையாக விளங்காதிருந்தால் இந் நிலை ஏற்பட்டிருக்காது என்பார். இங்கு ஒருவர் மற்றவரை புரிந்துகொள்ளாத நிலை பிரச்சினைக்குக் காரணம் என்பதை புரிய முடிகிறது.



கணவன் - மனைவி உறவு பாதிப்படைய மற்றொரு காரணமும் உண்டு. இருவரும் ஒன்றாக வாழும்போது ஒவ்வொருவரும் தத்தமது வேலைகளைப் பூர்த்தி செய்வதை மட்டும் சிந்திப்பதுண்டு. அதாவது தன்னைப்பற்றி மட்டும் சிந்திப்பதுண்டு. உதாரணமாக, வேலை முடிந்து வீட்டுக்கு வந்ததும் கணவன் தன் மனைவியுடன், தனது உணவு, தனது உடை, தனது இளைப்பாறு தலைப்பற்றி மட்டும் கதைக்கிறான் என்று வைத்துக்கொண்டால், அவர் மனமுதிர்ச்சி அடையவில்லை எனலாம். மனமுதிர்ச்சி அடைந்தவர் தன்னை மட்டுமல்ல மற்றவரது உணவு, உடை, இளைப்பாறுதலைப்பற்றியும் சிந்திப்பர். சாதாரணமாக குடும்பத்தில் தன்னை மட்டும் சிந்திக்கின்ற நபரை மற்றவர்களுக்கும் பிடிக்காத நிலை ஏற்படும்." தனது தேவையை மட்டும் பூர்த்தி செய்ய நினைப்பது சிறு வயதுக்குப் பொருத்தமான நடத்தையாகும். வளர்ந்தவர்களுக்காக இருக்கும் வாழ்வே திருமண வாழ்வாகும். சிறுபிள்ளைகள் எப்பொழுதும் தமது தேவைகளை மட்டுமே பூர்த்தி செய்ய முயலுவர். தனது தந்தை வேறொரு பிள்ளையைத் தூக்கி வைத்திருப்பதை மற்றைய குழந்தை விரும்பாது. ஆனால் வளர்ந்ததும் இந்நிலை மாறவேண்டும்.

மனமுதிர்ச்சி பெற்ற ஒருவரில் சுயநலம் குறைந்து, பொது நலம் கூடும். அறிவற்ற நிலையிலிருந்து, அறிவுள்ள நிலைக்கு மாறவேண்டும். தங்கும் நிலையிலிருந்து, சுயாதீனமாகும் நிலைக்கு மாறவேண்டும்.

ஒருவர் தன்னை விட மேலாக மற்றவரை அன்பு செய்ய முடியாது. தன்னை அன்பு செய்வது போல் மற்றவரை அன்பு செய்தாலே போதுமானது. நான் விரும்புவதையே மற்றவரும் விரும்பவேண்டுமென்று பலாத்காரப்படுத்துவது மனமுதிர்ச்சி அடைந்த நிலையல்ல. அப்படி நான் எதிர்பார்த்தால் மற்றவரிலும் என்னையே காண்கின்றேன் என்பது அர்த்தம். மற்றவரை அன்பு செய்யவில்லை, மற்றவரிலும் என்னையே அன்பு செய்கிறேன் என்பது பொருள். மற்றவரை அவராக இருக்கவிட வேண்டும்.

ஒருவருக்குத் தன்னைப் பற்றிய அறிவு தேவை. தன்னை அறிந்தவரே மற்றவரையும் அறிவார். தன்னைப் புரிந்து தன்னை அன்பு செய்பவரால் மட்டுமே மற்றவரைப் புரிந்து, மற்றவரை அன்பு செய்ய முடியும். தன்னை விட வேறுபட்ட கருத்துள்ளவரையும் அன்பு செய்ய மனமுதிர்ச்சி அடைந்தவரால்தான் முடியும்.

எஸ்.ஜே.யோகராசா

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

### சிந்தனைக்கு

உண்மை எக்காலத்திலும் தோற்க மாட்டாது.
- *மகாத்மா காந்தி.*

## நமது நோக்கு

### நியாயம் உணரும் சர்வதேசம்!

ஈழத்தமிழர்களின் பிரச்சினைகளை சர்வதேசம், சரியானவகையில் புரிந்துகொண்டு உள்வாங்கி வருவதையும் - தமிழர்களின் ஏக பிரதிநிதிகளாக விடுதலைப்புலிகளை ஏற்றுக்கொண்டு, முன்னர் தமது தவறான கணிப்பீடுகளாலும் அரசாங்கத்தின் அழுத்தத்தாலும் உருவாக்கப்பட்ட அவர்கள் மீதான 'பயங்கரவாதத்' தோற்றத்தை விட்டுத்தள்ளவும் சர்வதேசம் தயாராகி வருவதை அண்மைக்கால நடவடிக்கைகள் எடுத்துக்காட்டுகின்றன.

தாய்லாந்துப் பேச்சுக்கள், அதனைத்தொடர்ந்து ஒஸ்லோவில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் என - விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ பங்கேற்பு தொடர்ந்துவரும் நிலையில், போராடும் அமைப்பாக மட்டுமல்லாது - தமிழ் மக்களின் அரசியல், சமூக, பொருளாதார, நிர்வாகக் கட்டமைப்புக்களின் அதிகார மையமாகவும் விடுதலைப்புலிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டனர்.

இந்த அங்கீகாரத்தின் வெளிப்படுத்தல்களில் ஒன்றாகவே -அமெரிக்காவும், பிரிட்டனும், விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவது அல்லது தளர்த்துவது என்ற முடிவுக்கு வந்திருப்பதை நோக்க வேண்டும்.

இதுவரைகாலமும் - விடுதலைப்புலிகள் பற்றி நிலவிவந்த சர்வதேசப் பார்வை - பெரும் மாற்றத்துக்குள்ளாகி இருப்பதோடு, அரசாங்கத்திற்கும் சமனான அந்தஸ்தில் விடுதலைப்புலிகளின் பலம் கருத்திற்கொள்ளப்படுவதும் இதனால் தெளிவாகின்றது.

சர்வதேச அரங்கில் கிடைத்துள்ள இந்த அங்கீகாரம் - ஈழத்தமிழர் பிரச்சினையை புதிய பரிமாணத்திற்குள் கொண்டு சென்றிருப்பதை கவனிக்க வேண்டும்.

எமது பிரச்சினை சர்வதேசியமயப்படுத்தப்பட்டிருப்பதன் மூலம் - நியாயமான, நிரந்தரமான அரசியல் தீர்வுக்கான மிகப்பலமான ஆதரவும், அனுசரணையும் எமக்குக் கிடைத்துள்ளது.

இவ்வாறானதொரு சூழல் - சமாதானத்தை நோக்கிய நகர்வுகளை உறுதிப்படுத்தியிருப்பது மட்டுமல்லாது, அமைதி முயற்சிகளை குழப்ப முயலும் சக்திகளை, வெளியுலகத்திற்குத் தோலுரித்துக் காட்டவும் வாய்ப்பைத் தந்துள்ளது.

இந்த வகையில் - இயல்பு வாழ்க்கையைக் குலைக்க முயலும், போரினையே விரும்பி அதன் மூலம் ஆதாயம் தேடத் துடிக்கும் - சக்திகள் யார் என்பதும், அவற்றின் சுயரூபமும் உலகின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது.

அண்மைய தினங்களில் - தென்னிலங்கையில், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அடிக்கடி முரண்படும் தோற்றங்களை, சர்வதேசமும் வெளிநாட்டு ஊடகங்களும் இந்த வகையில் அக்கறையுடன் நோக்க ஆரம்பித்திருப்பதும் இதன் ஒரு கட்டமே.

ஒரு உதாரணமாக - குரோஷிய நாட்டு ஜனாதிபதியுடனான சந்திப்பில், சந்திரிகா குமாரதுங்க வெளியிட்ட சமாதான முயற்சிகள் பற்றிய கருத்துக்களை விமர்சித்த ஏ.எவ்.பி. செய்தி ஸ்தாபனம் - கடந்த ஐந்து நாட்களுக்குள், மூன்றாவது U திருப்பத்தை, சந்திரிகா குமாரதுங்க அடைந்துவிட்டதாகக் கேலி செய்துள்ளது.

இவ்வளவில் - முன்னரைப் போலல்லாது, தமிழர் பிரச்சினையில் உலகின் கவனம் தீர்க்கமாயுள்ளதையும், உள்ளார்த்தத்தை - யதார்த்தத்தை புரிந்து கொண்டதாக சர்வதேசம் செயற்பட ஆரம்பித்திருப்பதையும் - ஈழத்தமிழர்களின் நியாயமான போராட்டத்திற்கு கிடைத்துள்ள மிகப்பெரும் வெற்றி என்றே கொள்ளலாம்.

இந்த வெற்றியைப் பறைசாற்றுபவையாகவே - எதிர்வரும் ஒஸ்லோ பேச்சுக்களும், அதன் பின்னர் எதிர்பார்க்கப்படும் விடுதலைப்புலிகள் மீதான அமெரிக்கா, பிரிட்டன் நாடுகளின் தடைநீக்கமும் அமையப் போகின்றன.

# நீதிமன்றத் தீர்ப்பைக் கண்டித்து அம்பாறையில் நேற்றுப் பேரணி

(அம்பாறை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் விதித்த 200 வருடச் சிறைத்தண்டனைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், இந்தத் தீர்ப்பை வாபஸ் பெறக்கோரியும் நேற்றுக் காலை திருக்கோவிலில் கண்டனப் பேரணி நடத்தப்பட்டது.

நேற்றுக் காலை 9 மணியளவில் அக்கரைப்பற்று மணிக் கூட்டுக் கோபுரத்தருகில் ஆரம்பித்த பேரணி திருக்கோவில் வரை இடம்பெற்றது. இந்தப் பேரணிக்கு அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு தலைமை தாங்கினார்.

சுமார் 3 ஆயிரம் பொதுமக்கள் கலந்து கொண்ட பேரணியின் முடிவில் கண்டனக் கூட்டமும் இடம்பெற்றது. இதையடுத்து புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு விதிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்பை வாபஸ் பெறுமாறு கோரும் மகஜர்கள் ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் ரனில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

# யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் பகிஷ்கரிப்பு நேற்றுடன் இடைநிறுத்தம்

## - கோரிக்கைகளுக்கு நிர்வாகம் உறுதியளித்ததாக அறிவிப்பு -

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் தாம் மேற்கொண்டு வந்த பகிஷ்கரிப்புப் போராட்டத்தைக் இடைநிறுத்துவதாக அறிவித்துள்ளனர்.

தமது கோரிக்கைகளை நிறைவேற்றப் பல்கலைக்கழக நிர்வாகம் - காலஅவகாசத்துடன் உறுதிமொழிகளைத் தந்துள்ளதால் - தாம் நேற்று முதல் விரிவுரைகளுக்குத் திரும்பியுள்ளதாகவும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையின் முழுவிபரம் வருமாறு -

இன்றைய நிலையில் குறுகிய காலத்துக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட ஏனைய பல்கலைக்கழகங்களில் உள்ள மாணவர்கள் அனுபவிக்கின்ற (உயர் கல்வி நிறுவனங்களின் மாணவர்களுக்கான) அடிப்படை வசதிகள் கூட எமது பல்கலைக்கழக மாணவர்களால் அனுபவிக்கமுடியாத துர்ப்பாக்கிய நிலமையே தொடர்கிறது. இது தொடர்பாக துணைவேந்தரோ, நிர்வாகமோ எந்தவித அக்கறையுமின்றி இருப்பது மட்டுமின்றி, மாணவர்கள் அவற்றை ஏற்படுத்தித்தருமாறு கோருகின்ற வேளைகளில், போலியான வாக்குறுதிகளை (அடுத்த கப்பலில் வருகின்றது, பாதை திறந்ததும் வருகின்றது) வழங்கி அவற்றைத் தட்டிக்கழித்து, அவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாது, பாடசாலை நிலையில் பல்கலைக் கழகத்தினை நடாத்தி வந்தார்கள். இவற்றை மாணவர்கள் வெளிச்சமூகத்துக்கு கொண்டு வருகின்ற வேளைகளில், பத்திரிகைகளுக்கு -இக் கோரிக்கைகள் பாரதூரமானவையோ, பெரியவையோ அல்ல என அறிக்கைகளை வெளியிட்டு மாணவர் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தி வந்தனர்.

மாணவர்களின் தேவைகள் யாவும் நிர்வாகத்தினால் சரியான முறையில் இனம் காணப்பட்டு உரிய முறையில் தீர்வு காணப்பட்டிருப்பின் மாணவர்கள் எந்தவிதப் போராட்டங்களையும் செய்யவேண்டிய நிலை உருவாகியிருக்காது. மாணவர்கள் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து போராட்டம் நடத்துகின்ற வேளைகளில், அவர்களின் கோரிக்கைகளைப் பரிசீலித்து ஒழுங்காக நிறைவேற்றுவதை விடுத்து, மாணவர்கள் தொடர்பாகத் தப்பான கருத்துக்களை சமூகத்துக்கு பத்திரிகைகள் மூலம் வெளியிட்டுத் தமது நிர்வாகத்தினை இலகுவான முறையில் கொண்டு செல்ல முற்பட்டு வருகின்ற படித்த புத்திஜீவிகளின் செயற்பாடு நீண்டகாலத்துக்கு ஆரோக்கியமானதாக இருக்காது என்பதையும் நிர்வாகத்தில் இருப்போர் புரிந்து கொள்ளவேண்டும். அதுமட்டுமின்றி, நிர்வாகம் மாணவர்களின் கல்விச் செயற்பாட்டுக்கு உரிய அடிப்படை வசதிகளை சரியான முறையில் இனங்காண வேண்டிய பொறுப்பினை உடையது. இங்கு நிலமை தலைகீழாக உள்ளது. மாணவர்களே தமது தேவைகளை முன்வைத்து அவற்றைப் பெறுவதற்குக் கூட போரட்டங்களை நடாத்த வேண்டிய நிலையில் உள்ளார்கள். இவ்விடயத்தில் துணைவேந்தரும் நிர்வாகமும் பல வருடங்களாக அசட்டையீனமாக இருந்து வருகின்றமை யாவரும் அறிந்ததே.

இந்நிலையிலேயே மாணவர்கள் சில நியாயமான கோரிக்கைகளை முன் வைத்து அவற்றினை நிறைவேற்றுமாறு கோரிவந்தனர். ஆனால் துணைவேந்தரும் நிர்வாகமும் அவற்றில் சிலவற்றினை மட்டுமே நிறைவேற்றி ஏனையவற்றிற்கு நிதியின்மை போன்ற போலியான காரணங்களைக் காட்டி தட்டிக்கழிக்க வழமைபோல முனைந்தனர். இதனை ஏற்க மறுத்தே மாணவர்கள் தமது விரிவுரைகளை 13.11.2002 முதல் பகிஷ்கரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்நிலையில் இன்று துணைவேந்தரும், நிர்வாகமும் சில கால அவகாசத்துடன் கூடிய உறுதிமொழிகளைத் தந்துள்ளார்கள்.

அவ்வுறுதி மொழிகளின் விபரம் வருமாறு:-

1. யாழ்.பல்கலைக்கழகத்தில் உள்ள நூல் நிலையங்கள் யாவும் 15.11.2002 இருந்து மாலை 6 மணிவரையும், 1.12.2002 இல் இருந்து மாலை 7 மணி வரையும், 01.01.2002 தொடக்கம் மாலை 8 மணி வரையும் திறக்கப்படும் எனவும்,

2. பல்கலைக்கழக மாணவர் பொது அறைக்குத் தேவையான வசதிகள் யாவும் 30.11.2002இற்கு முன்னர் முழுமையாக நிறைவு செய்யப்பட்டிருக்கும் எனவும்.

3. மாணவர்கள் தமது கல்வி ஆய்வுத் தேவைகளை மேற்கொள்வதற்குத் தேவையான இரு பேருந்துகளும் வெகுவிரைவில் (15.12.2002 முன்னர்) கொள்வனவு செய்தோ அல்லது ஒப்பந்த அடிப்படையிலோ பெற்றுத்தரப்படும் எனவும் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

இதனை ஏற்று நேற்றுத் திங்கட்கிழமை தொடக்கம் மாணவர்கள் விரிவுரைகளுக்குத் திரும்ப முடிவு செய்துள்ளார்கள் . எனினும் இவ் வாக்குறுதிகள் 15.12.2002 இற்கு முன்னர் நிறைவேற்றப்படாது கடந்த காலங்களைப் போன்று ஏமாற்றப்படும் பட்சத்தில் எதிர்வரும் 16.12.2002 முதல் மாணவர்களினால் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி பல்கலைக்கழகத்தின் அனைத்து செயற்பாடுகளும் முழுமையாக முடக்கப்படுமென நேற்று கைலாசபதி கலையரங்கில் காலை 9 மணிக்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டுள்ளது. இதற்கு துணைவேந்தரும் நிர்வாகமும் உரிய நடவடிக்கை எடுப்பார்களா? என மாணவர் ஒன்றிய அறிக்கையில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

# பொறாமையில் அமைதியைச் சிதைக்கும் ஜனாதிபதி சந்திரிகாவும் கதிர்காமரும்

## அமைச்சர் ராஜித சேனாரட்ண குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், அவரது ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமரும் தமது தனிப்பட்ட பொறாமையாலும் யதார்த்தத்திற்குப் புறம்பான அரசியற் செயற்பாடுகளாலும் அமைதிக்கான முயற்சிகளைச் சிதைத்துவிட முயற்சிப்பதாக காணி அமைச்சர் ராஜித சேனாரட்ண குற்றஞ் சாட்டியுள்ளார்.

ஜனாதிபதியினதும் கதிர்காமரதும் அரசியல் வெற்றுத் தன்மை அவர்களது அறிக்கைகள் வாயிலாக நாடு முழுவதும் தெரிந்து விட்டதாகக் கூறியுள்ள அமைச்சர் சேனாரட்ண-

கதிர்காமர் தற்போது பதவியிலில்லாத போதிலும் சொகுசு வாகனங்களைப் பயன்படுத்துவதற்கு அமைச்சர்களுக்கே வழங்கப்படாத வசதிகளை அவர் அனுபவிப்பதற்கும் நன்றி செலுத்துமுகமாகவே கதிர்காமர் இவ்வாறான அறிக்கைகளை வெளியிடுவதாகவும் கூறியுள்ளார்.

# திருக்கேதீஸ்வரத்திலிருந்து படையினர் வெளியேறுவர்!

மன்னார், திருக்கேதீஸ்வரம் கோயிலைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் முகாமிட்டிருந்த இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கோயில் சுற்றாடலில் இருந்த இராணுவத்தினர் அங்கிருந்து விலகி, அயல் பிரதேசங்களில் முகாமிட்டிருந்தனர். இவர்களே அங்கிருந்து வெளியேறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பல வருடங்களாக இராணுவத்தினர் அங்கு நிலை கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### கொள்கைகள் சர்வதேச மயப்படுத்த

# சர்வதேச செயலரை ஜே.வி.பி. நியமித்தது

ஜே.வி.பி.யின் திட்டங்கள், கொள்கைகளை சர்வதேச அளவில் விரிவுபடுத்துவதற்காக, அது சர்வதேச செயலாளர் ஒருவரை நியமித்துள்ளது.

இதுவரை சர்வதேச சம்பந்தமான விடயங்களை கவனித்து வந்த கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்கவுக்குப் பதிலாக நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் நியமிக் கப்பட்டுள்ளார்.

விஜித ஹேரத், கே.டி.லால்காந்த ஆகியோர் அரசியற் பிரிவிலும் அங்கத்தவராகச் சேர்க்கப்பட்டதோடு, மாணவர் பேரவையைச் சேர்ந்த சாமிர கொஸ்வத்த, பிரியங்கார வீரகுமார, ஆர்.சந்திரசேகர் ஆகியோர் மத்திய குழுவில் இணைக்கப்பட்டுள்ளனர்.

மீண்டும் ஜே.வி.பியின் தலைவராக சோமவன்ச அமரசிங்கவும், செயலளாராக ரில்வின் சில்வாவும், பிரசாரச் செயலாளராக விமல் வீரவன்சவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

# சமஷ்டியின் அடிப்படைக் கட்டுமானம் மக்கள் நலனிலிருந்தே ஆரம்பமாகின்றது!

இக்கட்டுரைத் தொடரிலே சமஷ்டியின் தத்துவார்த்தப் பரிணாம வளர்ச்சியினைக் கடந்த வாரம் பார்த திருந்தோம். இவ்வாரம் சமஷ்டி அரசாங்கம் செயனமுறையில் எவ்வாறான அம்சங்களை வேண்டி நிற்கினறது? அவை தொடர்பான மடடுப் படுத்தல்கள் எவை? பூரண சமஷ்டியின் செயற்பாட்டுத் தடங்கள் என்பன தொடர்பாக இவ்வாரம் ஆராய்வோம்.

ஒரு குறித்த நாடு சமஷ்டி ஆட்சி அமைப்பை வேண்டி நிற்குமானால், அநநாடு எவ்வாறான சமூக பொருளா

## சுயநிர்ணயம் ~ ஒரு பார்வை

### பகுதி –8

தாரவிருத்தி நிலைகளில், கூட்டுச் சேரக்கூடியதாக இருக்கும் என சமஷ்டிக் கோட்பாட்டாளர்கள் வரையறுக்கின்றனர். இதனை நோக்குமிடத்து, கூட்டாட்சியில் இணைந்துள்ள அரசுகள் அல்லது மாநிலங்கள் சமத்துவமுடையனவாக இருத்தல் வேணடும் என அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

இந்த வகையில் இணையவுளள மாநிலம் அல்லது அரசு எவ்வாறான பொருளாதார வளத்தைக் கொணடுள்ளது? எவ்வளவு சனத்தொகையை கொண்டுள்ளது? பரப்பளவில் எவ்வளவு பெரிதானதாகவோ, சிறியதாகவோ- ஒப்பீட்டளவில் மற்றைய மாநிலத்துடன் தன்னை சம அதிகாரத்துடன் இணைத்துக்கொள்ளக் கூடிய தகைமைகளை கொண்டுள்ளதா? எனபது பற்றியும் ஆரம்பகால சமஷ்டிக் கோட்பாட்டாளர்கள் சிந்தித்தனர். மத்திய அரசாங்கத்தில் தங்கள் மாநிலத்தினை அல்லது பிரதேச அரசை பிரதிநிதித்துவப் படுத்தும் அங்கத்துவ எண்ணிக்கை- மற்றைய மாநிலங்களோடு எவ்வித்திலும் முரண்படாத வகையில்- அதாவது, மற்றைய மாநலத்தினை விட கூடுதலாகவோ, குறைவானதாகவோ இருக்கக் கூடாது என எதிர் பார்க்கப்பட்டது.

ஆனால், நடைமுறையில் இவ் வேறுபாடு காணப்படவே செய்கின்றது. இதனால் மத்திய அரசாங்கத்தில், மாநிலங்களுக்கான நிதி

மற்றும் தேவையான ஒதுக்கீடுகள் சமனற்ற முறையில் கையாளப்பட்டு வருவதை சமஷ்டி நாடுகள் என்று தம்மைக் கூறிக்கொள்வனவற்றில், நடைமுறையில் இருப்பதனை இன்றும் அவதானிக்கலாம்.

இவ்வாறான சமஷ்டி முறைமையினையே - "பாதிச் சமஷ்டி" (**Guasi Federal**) என அழைக்கப் படுகின்றது. பாதிச் சமஷ்டியிலே சமஷ்டி முறைமையின் பண்புகளிலும் பார்க்க ஒற்றையாட்சியின் பண்புகள் மேலோங்கி இருப்பதனை நாம் நடைமுறை ரீதியாக அவதானிக்கலாம். இதற்கு நல்லதொரு உதாரணம் இந்தியாவாகும். இங்கு சமஷ்டியின் சாயல்களை ஒத்த ஒற்றையாட்சியே முதன்மை பெற்றிருக்கின்றது.

ஆனால் சமஷ்டி முறைமையின் கோட்பாடுகளுக்கு ஏற்ப மத்திய - மாநில அரசாங்கங்களுக்கு இடையிலான உறவுகள் சுதந்திரமானவையாக அமைய வேண்டும். அதாவது, அவற்றின் இறைமையை தத்தமது நியமங்களுக்கேற்ப சுதந்திரமாக அனுபவிக்கக்கூடியதான ஏற்பாடுகளை, சமஷ்டிக் கோட்பாட்டை பின்பற்றும் அரசியல் திட்டங்கள் தெளிவாக வரையறுத்திருக்க வேண்டும்.


எவ்வாறு மத்திய - மாநில அரசாங்கங்களுக்கிடையில் ஒற்றுமையான உறவுகள் தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்கின்றதோ -அதேபோல், ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலஙகள் சமஷ்டி அமைப்பில் இணைநதிருக்கும்போது ஒவ்வொரு மாநிலமும் தத்தமது வரையறைகளுடன் மற்றைய மாநிலத்துடன் சமுக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாசாரக் காரணிகளை விட்டுக்கொடுத்து சுமுகமான நிலையில் இயங்க வேணடும். இதுவே சமஷ்டி அமைப்பு முறைமையில் பிரதானமாக எதிர் பார்க்கப்படும் பணபாக அமைகின்றது. இவ்வாறான -சாதகமான சூழ்நிலையிலேயே சமஷ்டி முறைமை திருப்திகரமாக இயங்க வல்லது

என்பதும் குறிப்பிடத்தக்கது.

இன்றைய உலக அரங்கில் சர்வதேச அரசியல் அரங்கிற்கு ஏற்ப சமஷ்டி முறைமை இரு வேறுபட்ட- அதேவேளை முற்றிலும் முரண்பட்ட நிலைகளில் உருவாகி வந்துள்ளதனை நாம் உன்னிப்பாக அவதானிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அவையாவன - அமெரிக்க சமஷ்டி முதல் இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் உலக அரங்கில் தோன்றிய புதிய அரசுகள் வரை- காலத்திற்குகாலம் தோன்றிய தேவைகளின் நிமித்தம், தாமாகவே கூட்டுககளை ஏற்படுத்தி, பின்னர் தமககிடையே வலுவான சமஷ்டியை தாமே விரும்பி ஏற்றுக்கொண்ட அரசாங்கங்கள் ஒரு வகைப்பட்டவை.

அடுத்து- ஏற்கனவே ஒற்றையாட்சி அமைப்பிற்குள் இருந்து இனரீதியாக, மதரீதியாக, மொழி ரீதியாக இருந்த வேறுபாடுகள் மற்றும் ஒற்றையாட்சியின் கீழ் இருந்த பெரும்பான்மையினர் மேலாதிக்கம் காரணமாக முரண்பாடுகள் முற்றியதன் பின்னர், பாரபட்சங்கள் தெளிவாக நடந்தேறியதால், சமச்சீரற்ற வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலைமைகளின் கீழ் குறித்த நாட்டின் முரண்பாட்டினைத் தீர்த்து - இனங்களுக்கிடையே, மொழிகளுக்கிடையே, மதங்களுக்கிடையே நல்லாட்சியை ஏற்படுத்த உருவான சமஷ்டிமுறையைக் கொண்ட நாடுகள் இன்னொரு வகைப்பட்டவை. இவ்வாறான சமஷ்டி முறைமைக்கு கனடா மிகச் சிறந்த உதாரணமாகும்.




இவ்விரண்டு முறைமைகளுக்கும் மேலாக பொருளாதார நலன் மற்றும் சந்தை விஸ்தரிப்புக்களுக்காக ஒரே குடையின் கீழ் சமஷ்டி அமைப்பினை உருவாக்குவதும் , தங்கு தடையற்ற பொருளாதார நலன்களை அனுபவிப்பதற்காக, முன்பு தேசியத்தை மிகவும் வலியுறுத்திய மேற்கைரோப்பிய நாடுகள பதினைந்தும் இணைந்து ஐரோபபிய யூனியன் என தற்பொழுது இயங்கி வருகின்றதை நாம் பிறிதொரு அமைப்பாகவும் ஆராயலாம்.

இந்த வகையில் - ஐரோப்பிய யூனியன் நாடுகள், தங்களுக்குள் இறுக்கமான கூட்டமைப்பை உருவாக்கவும், உலகமயமாதலை எதிர்கொள்ளவும் "ஐரோப்பிய சமஷடியினை" உருவாக்கத் தீவிரமாக முயற்சிகளை மேற்கொள்வதானது, சமஷ்டி முறைமைக்கான தோற்றுவாய்க்கு புதியதொரு பரிணாமத்தினை அதன் வரலாற்றில் ஏற்படுத்தியுள்ளது. இது சமஷ்டி அமைப்புகளின் புதிய பரிமாணத்தினை எடுத்துக்காட்டும்.

இவ்வாறு - சமஷ்டி முறைமையானது, தனது தேவைப்பாடுகளுக்கான புற யதார்த்தமான சூழலைக் கொண்டிருக்கும்போதும் - சமஷ்டி அரசாங்கத்தின் அரசியல் ஒருங்கமைவானது (**Political System**) ஒற்றையாட்சியுடன் ஒப்பிடுகையில் சிக்கலானதாகவும் வரையறையற்றதாகவும் தென்படும். அந்த வகையில் பல பிரச்சினைகளையும் மட்டுப்படுத்தல்களையும் சமஷ்டி முறைமை எதிர்நோக்க வேண்டிய நிலைமையில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த வகையில்- மிகவும் பிரதானமானது அதிகாரப் பங்கீடு (**Division of Power**) ஆகும்.

சமஷ்டி முறைமையானது - எவவளவிற்கு வெற்றிகரமாக இயங்குகின்றது என்பது அதிகாரப் பங்கீட்டிலேயே தங்கியுள்ளது. மத்திய - மாநில மற்றும் மாநில அரசுகள் தமக்கிடையேயும் சமநிலையைப் பேணவும், அவற்றுக்கிடையே சுயாடசியைப் பேணவும் இந்த அதிகாரப்

**வேலும்மயிலும் சேந்தன்**

பங்கீடு மிகவும் அவசியமானது.

எனவே - சமஷ்டி அரசாங்கத்தின் அதிகாரப் பகிர்வு விடயங்களை அந்நாட்டின் அரசியல் திட்டம் தெளிவாகவும் விடயதானத்துடனும் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

இந்த வகையில் - அதிகாரங்கள் பகிரப்படும் பட்டியலானது இரண்டு பட்டியலாக மட்டுமே இருக்க வேண்டும். மாறாகத் தெளிவிலலாத, நடைமுறை வரையறையில்லாத மூன்றாவது பட்டியல் சில சமஷ்டி முறைகளில் இருப்பதனை அவதானிக்கலாம். ஆனால் அவை பாதிச் சமஷ்டி முறைமைக்கே பெருமபாலும் வலுச் சேர்த்துள்ளதனை நாம் அவதானிக்கலாம்.

இந்த வகையில் மாநிலங்களுக்கான பட்டியல் - மாநிலங்களின் செயறபாடுகளையும் அதன் சுயாதிக்கத்தையும் வரையறுக்க கூடியதாக அமையும்.

மத்திய அரசின் பட்டியல் அல்லது கூட்டாட்சியின் பட்டியல் என்பது - மத்திய அரசாங்கத்திற்கு உள்ள அதிகாரங்களை வரையறுத்துக் கொள்ளும். அதாவது மத்திய அரசு எவ்வாறான விடயங்களில் அதிகாரங்களைக் கொண்டது என்பதுடன் இது நிறைவு பெற்றுவிடும். ஏனெனில் மத்திய- மாநில அரசுகளின் அதிகாரங்கள் வரையறுக்கப் பட்டதன் பின்னர் - வரையறுகக்படாதவிடயங்களின் பட்டியல் (**Concurrent list / Residuary list**) என்ற ஒரு பட்டியல் அமைந்திருப்பது சமஷ்டியினை என்றுமே நெருக்கடிக்குள்ளேயே வைத்திருக்கும் என்பது திண்ணம்.

முறையே - மத்திய, மாநில அரசாங்கத்தின் அதிகாரங்களுக்கு அப்பால், மீதமாக இருக்கும் விடயங்கள் காலப்போக்கில் பிரச்சினைக்கு உரியவையாக எழுந்து கொளளாது என உறுதியாகக் கூறிவிட முடியாது. எனவே அவ்வாறன சந்தர்ப்பங்களில் அரசியல் திட்டமானது- மிகுந்த வலுவேறாக்கற் கோட்பாட்டினை (**Separation of powers**) கொண்டமைந்ததாக அமையவேண்டும். அத்தோடு - நீதித்துறை பக்கச்சார்பற்ற வகையில் அரசியல் ஸ்திரத் தன்மையையும் நாட்டின் எதிர்காலததினையும் கருத்திறகொண்டு செயறபடுமாயின், அதுவே - சமஷடி முறைமையின் வெற்றிக்கு வழிகோலும்.

மேலும் தேவைப்படுமிடத்தில் அரசியலமைப்பில், திருத்தங்களை (**Amendments**) மேற்கொள்ளக கூடிய வகையில் நெகிழும் அரசியல் திட்டங்களைக் கொண்டமைந்த அரசியல் திட்டங்கள் - சமஷ்டி முறைமை நின்று நிலை பெறுவதற்கு இன்று அவசியமானதாக உணரப்படுகின்றது. நடைமுறைப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும்போது - மக்களின் விருப்புக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, மக்களின் விருப்புக்கள் அறியப்பட்டு, அரசியற் திட்டத்தில் திருத்தங்கள் மேற்கொளளப்பட வேண்டும். மாநில அரசுகளே தமது மக்களிடம் அரசியல் விடயங்கள் தொடர்பாக விருப்புக்களைக் கோரலாம் அவ்வாறாக நெகிழக்கூடிய அரசுத் திட்டங்கள் சமஷ்டி முறைமை பேணப்பட மிகவும் அவசியமானதாகும்.

இந்த வகையில் அடுத்தவாரம் சமஷ்டி முறைமையில் இரட்டை சமஷ்டியமைப்பினைப் (**Dual federalism**) பற்றி நோக்குவோம்

(ஈதி செவ்வாய் தோறும் தொடரும்...)

# சோதி வடிவமாக இறைவன் தோன்றிய திருக்கார்த்திகைத் திருநாள்

**அ**திகார மலத்தால் அறிவு அழிந்த பிரமனும் திருமாலும் தம்முட் பெரியார் யார்? என வாதிட்டு வழக்கிட்டுப் பொருதினர். அப்போது இறைவன் அவர்களிடம் இருக்கிற அறியாமையாகிய இருளைப் போக்க, அறிவாகிய ஒளிப்பிழம்பாய்த் தோன்றினார். இருவரும் இதன் முதலையும், முடிவையும் காண்போமென எண்ணி பிரமன் அன்னப் பறவை உரு எடுத்துக்கொண்டு திருமுடியைப் பார்க்கப் புறப்பட்டான். திருமால் பன்றி உருவம் தாங்கி புமியைத் துளைத்துக்கொண்டு இறைவனின் திருவடியைப் பார்க்கப் புறப்பட்டார். இருவரும் அடியையும், முடியையும் காணமுடியாமல் திண் டாடினார்கள். அப்போது அவர்களிடத்தில் தோன்றிய அகந்தை மறைந்து விட்டது. அப்போது உண்டான சுடர்தான் பின்பு அண்ணாமலையாகவும் சிவலிங்கமாகவும் விளங்குகிறது என்று சிவபுராணம் சொல்கிறது.

திருமாலும், பிரமனும் தாமே பெரியவர் என்று அகங்கரித்தபோது முடிவு கட்டுவதற்குச் சிவபெருமான் சுடராக நின்றார். அந்தச் சுடரை அளவெடுக்க எண்ணிய இரண்டு பேரும் விலங்காகவும், பறவையாகவும் ஆனார்கள்.

செய்யத் தகாத ஒன்றை மிகச் சிறந்தவர் எண்ணினாலும் அப்போதைக்கு அவர் விலங்கின் நிலையை அடைகிறார் என்ற உயர்ந்த நீதி இதிலிருந்து கிடைகிறது. அகங்கரித்ததோடு நிற்காமல் அளவெடுக்கப்படாத ஒன்றை அளவெடுக்கப் புகுந்த அறியாமையினால் ஒருவர் பன்றியாகவும், பறவையாகவும் ஆகி விட்டார் அல்லவா?

உயர்ந்தவர்கள் தாழ்ந்து போனாலும் அதிலேயும் ஓர் உயர்வு இருக்கும் .திருமால், பிரமன் ஆகிய இரண்டு பேரில் திருமால் உயர்ந்தவர். ஆணடவனது அடிமுடி காணும் முயற்சியல் சிறந்தது இறைவனுடைய அடியைக் காண்பது. திருமால் இயல்பாகவே உயர்வானவர் ஆதலின் உயர்ந்த செயலாகிய திருவடியைக் காணும் முயற்சியில் ஈடுபட்டார். சிவபரஞ்சுடரின் திருவடியைக் காண்பதற்காகத் திருமால் செய்த காரியம் இது. ஏன் அப்படிச் செய்தார்? அவர் எவ்வளவு பெரியவராக



இருந்தாலும் யான் என்னும் அகந்தை அவர் உள்ளத்தை அப்பிக் கொண்டது. அகங்காரம் யாருக்கு வந்தாலும் அதனால் அறியாமை மிகுமே ஒழிய ஒளியைக் காணும் அறிவு தட்டுப்படாது என்ற கருத்தைத் திருமால் நாடகம் போட்டுக் காட்டினார். யான் எனும் அகந்தை போகவேண்டும். அதனால் தான் இன்பம் வரும் என்பதை எமக்கு "அடி முடி தேடிய சேதி" உணர்த்தியிருக்கின்றது.

பரம்பொருளாகிய இறைவன் "ஒளி" வடிவாக காட்சி கொடுத்து ஜெகசோதியாக தோன்றிய இத் திருநாளே திருக்கார்த்திகைத் திருநாளாக இந்துக்கள் கொண்டாடுகின்றனர், கார்த்திகை மாதத்திலே வரும் கார்த்திகை நட்சத்திரத்தை திருக்கார்த்திகை என்று அழைப்பர். ஆலயங்களிலே "ஒளிப்பிழம்பாய் தோன்றிய இறை ஜோதியை" "சொர்க்கப் பாவனை" என்ற பெயரில் இவ்விழா சிறப்பாக கொண்டாடப்படுகின்றது.


ஆலயங்கள் மட்டுமல்ல வீடுகளிலும் தீபங்களை ஏற்றி, வழிபாடாற்றுகின்ற மரபு இந்துக்களிடையே மிகுந்த நம்பிக்கையோடு நடைபெறுகின்றது. அகந்தை எனும் இருளகன்ற இந் நாளில் அறிவு ஒளி பெற்று வாழ நாமும் இறைவனை வேண்டுவோமாக.


**- மதுரகவி**

# புனர்வாழ்வு, அபிவிருத்தி உபகுழுக் கூட்டத்திலிருந்து...


காவல்துறைப் பாதுகாப்புடன் வரும் புலிகள் தரப்பு


அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் வந்திறங்குகிறார்.


பேனாட் குணதிலகவை வரவேற்கும் தமிழ்ச்செல்வன்.



வெஸ்ட்பேர்க் வரவேற்கப்படுகிறார்.


பேச்சுக்களில் புலிகள் தரப்பு


பேச்சுக்கள் ஆரம்பமாகுமுன் புகைப்படப் பதிவுகள்


கலந்தாலோசனையில் மகேஸ்வரன், பாலகுமாரன், பூவண்ணன்.


பேச்சு முடிந்து திரும்பும் ஜப்பானியப் பிரதிநிதி.


இங்கேதான் நேற்றைய பேச்சு நடந்தது - கிளிநொச்சி கச்சேரி

# வவுனியா பிராந்தியப் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் புலிகளின் கோரிக்கைகளுக்கு இராணுவம் பின்னடிப்பு!

## முடிவுகள் எட்டப்படாதது கவலை தருவதாக கேணல் ஜெயம் தெரிவிப்பு

(வவுனியா)

எதுவித முக்கிய முடிவுகளும் எடுக்கப்படாத நிலையில் - வவுனியா பிராந்தியப் பாதுகாப்பு உபகுழுக்கூட்டம் நேற்று முடிவடைந்தது.

ஓமந்தை சூனியப்பிரதேசத்தில் படைத்தரப்புக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சந்திப்பில் - மூன்று முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டதாயினும் அவற்றில் எவற்றிலுமே நடைமுறைச் சாத்தியமானதான முடிவுகள் எட்டப்படாத நிலை காணப்பட்டது.

நேற்றுக்காலை 10 மணிக்கு ஆரம்பித்த இக்கூட்டம் பிற்பகல் 3 மணி வரை நடைபெற்றது.

படைத்தரப்பில் - தொண்டர் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட, மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால, வடபிராந்திய கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் வீரசேகர, குரூப் கப்டன் கோலித குணதிலக, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அப்துல் மஜீத் ஆகியோரும்,

விடுதலைப் புலிகளின் தரப்பில்- வவுனியா, மன்னார் பிராந்தியங்களின் கட்டளைத் தளபதி கேணல் ஜெயம், கடற்புலிகளைச் சேர்ந்த லெப்.கேணல் லக்ஷ்மன், மேஜர் விடுதலை, மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அமுதாப், வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன், முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன். அரசியல்துறைப் பிரிவின் முக்கியஸ்தர் தயா மாஸ்ரர் ஆகியோரும்,

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ், செயலகத் திட்டமிடற் பணிப்பாளர் திருமதி கேதீஸ்வரன், வவுனியாத் தமிழ்ப் பிரதேச செயலகப் பிரிவின் பிரதேச செயலாளர் சத்தியசீலன், செட்டிக்குளம் பிரதேச செயலாளர் செல்வி சுகந்தினி துரைச்சாமி ஆகியோரும் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வவுனியா மாவட்டத் தலைவர் யுக்கா பொலனன் தலைமையில் ஐவர் கொண்ட குழுவும் நேற்றைய சந்திப்பில் பங்கேற்றனர்.

இச்சந்திப்பில் மூன்று முக்கிய விடயங்கள் பிரதானமாகக் கலந்துரையாடப்பட்டன.

### மணலாற்றுப்பகுதியில் மக்களை மீளக் குடியமர்த்தல்

முல்லை - மணலாற்றுப் பகுதிகளிலும், இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டங்கேணி ஆகிய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் அபபகுதிகளில் மீளக்குடியமர்த்தப்பட வேண்டுமென விடுதலைப் புலிகள் கோரினர்.

ஆனால் - குறிக்கப்பட்ட பிரதேசங்கள் திருமலை இராணுவப் பகுதிக்குள் வருவதாகவும், அதனால் நாளை மறுதினம் திருமலை பாதுகாப்பு உபகுழுக் கூட்டத்திலேயே இது பற்றி ஆராயமுடியும் என மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட கூறினார்.

### வவுனியா பாதுகாப்பு வலயங்கள் மீள்குடியேற்றம்.

வவுனியா மாவட்டத்திலுள்ள உயர் பாதுகாப்பு வலயங்களிலிருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களை மீளவும் குடியமர்த்த வேண்டுமென விடுதலைப் புலிகள் கோரினர்.

ஆனால் - இவ்வாறான பகுதிகளிலுள்ள இராணுவ முகாம்களிலிருந்து 600 மீற்றருக்கு அப்பாலேயே மக்கள் குடியமர அனுமதிக்கப் படுவார்கள் எனப் படைத்தரப்பினர் தெரிவித்தனர்.

அவ்வாறெனில், ஏ-9 வீதியிலுள்ள உயர் பாதுகாப்பு வலயத்தில், ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கும் - ஓமந்தை, நொச்சிமோட்டை, இறம்பைக்குளம் பகுதிகளில் மக்கள் எவ்வாறு குடியமர முடியும் என்றும், இவற்றுக்கிடையேயான தூரமே ஒரு கிலோமீற்றராக இருக்கும்போது இரண்டு முகாம்களுக்கிடையிலும் தலா 600 மீற்றர்படி 1200 மீற்றர் தூரத்திற்கு குடியமர முடியாது. இது யதார்த்தமற்றது எனப் புலிகள் கருத்துத் தெரிவித்தனா.

அருகருகே இராணுவ முகாம்களை வைத்துக்கொண்டு இவ்வாறு நிபந்தனை விதிப்பது நடைமுறைக்குப் பொருந்தாது என்றும் புலிகள் தரப்புக் கூறியது.

இதையடுத்து இவ்விடயம் பற்றி மேலும் ஆராய்வதற்காக உபகுழு ஒன்றை அமைப்பதென தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி விடுதலைப்புலிகளின் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளரான எழிலன் மற்றும் கேசவன், அப்பகுதிக்குரிய பிரதேச செயலாளர், கிராமசேவகர், குறிப்பிட்ட பகுதிகளுக்குரிய இராணுவப் பொறுப்பதிகாரிகள் உள்ளடக்கப்படும் இக்குழுவுக்கு, இணைபபாளராக வவுனியா அரசாங்க அதிபர் கே.கணேஷ் செயற்படுவார் என முடிவானது.

### பொதுக் கட்டடங்களிலிருந்து படைவிலகல்


கேணல் ஜெயம்

வவுனியா, மன்னார் மாவட்டங்களிலுள்ள பொதுக் கட்டடங்களிலிருந்து இராணுவத்தினர் விலகவேண்டுமென புலிகள் தரப்பு வலியுறுத்தியபோது -

உடனடியாக அது சாத்தியமில்லை என்றும் போதிய நிதி அரசிடம் இல்லாததால் மாற்று ஏற்பாடுகளைத் தற்போதைக்கு செய்ய முடியாது என்றும் தெரிவித்த மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட

தொடர்ந்து வரும் காலத்தில் இதுபற்றிக் கவனமெடுப்பதாகத் தெரிவித்தார்.

### கேணல் ஜெயம் கவலை தெரிவிப்பு

தாம் பல எதிர்பார்ப்புக்களுடன் நேற்றைய சந்திப்பில் கலந்து கொண்டபோதும் எந்தவொரு முடிவும் எட்டமுடியாமற் போனது கவலைக்குரியதென - விடுதலைப்புலிகளின் தரப்புக்குத் தலைமை தாங்கிய கேணல் ஜெயம் தெரிவித்தார்.

இதுபற்றிச் செய்தியாளர்களிடம் பேசிய அவர்- ஒஸ்லோ பேச்சுக்களுக்குப் பின்னர் முன்னேற்றகரமான நகர்வுகள் தென்படுமா என்பது பற்றி எதிர்பார்த்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

COMPUTER ELECTRONIC SYSTEMS (PVT) LTD

AVAILABLE COURSES
- MS OFFICE 2002
- VISUAL BASIC 6.0
- ORACLE 8.i
- JAVA 2
- HARDWARE
- C++

Closing Date: 15.12.2002

Computer Electronic Systems (Pvt) Ltd.
No.223, Kasthuriyar Road,
Jaffna.
(Opposite of J/Hindu Primary School)

# உயர் பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்பட்டாலே இயல்புநிலை

## - தமிழ்ச்செல்வன் அறிவிப்பு

(கிளிநொச்சி)

குடாநாட்டில் இயல்புநிலையை ஏற்படுத்துவதற்கு உயர் பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்பட்டு படைநிலைகளும் அகற்றப்பட வேண்டும். அப்போதுதான் முழுமையான இயல்பு நிலை தோன்றும் இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு உபகுழுவின் கூட்டத்தின் முடிவில் நேற்றுமாலை செய்தியாளர்களிடம் பேசும்போதே மேற்கண்டவாறு தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசும் போது, புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வசதியாக இராணுவம் ஆக்கிரமித்து வைத்திருக்கும் பிரதேசங்களிலிருந்து வெளியேறுவது அவசியமாகும்.

உயர்பாதுகாப்பு வலயமென்றும், பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த பகுதியென்றும், கூறிக்கொண்டு பொது மக்கள் செறிவாக வாழ்கின்ற பல பிரதேசங்களில் இராணுவம் நிலை கொண்டு இருக்கின்றது.

இவ்வாறான பகுதிகளிலிருந்து இராணுவம் வெளியேறி அப்பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்த்தப்படுவது அவசியம். இவ்விடயம் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. இவ்விடயத்தில் விரைவில் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு இராணுவத்திற்கு உண்டு. தற்போது இழுபறி ஏற்பட்டாலும் விரைவில் நல்ல தீர்மானத்தை எடுக்கும் பொறுப்பு அரசிற்கும் படைத்தரப்பிற்கும் உண்டு.

பேச்சுக்கள் தொடர்பாக மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தக் கூடிய தகவல்கள் ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா என செய்தியாளர்கள் கேட்டபோது, இன்று நாம் சில விடயங்களில் பேசி இணக்கம் கண்டுள்ளோம். அந்த விடயங்கள் நடைமுறைக்கு வரும்போது தான் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் என சு.ப.தமிழ்ச்செல்வன் பதிலளித்தார்.

ஏற்கனவே பேசி இணக்கம் கண்ட விடயங்களில் நடைமுறைக்கு வராத விடயங்கள் பல உண்டு. இந்தத் தடவை சர்வதேச சமூகத்தின் ஆதரவுடனும் பங்களிப்புடனும் நடத்தப்படுகின்ற நடவடிக்கைகளை நிச்சயமாக நிறைவேற்றப்பட வேண்டிய பொறுப்பு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு உண்டு. இவ்வாறான பொறுப்பிலிருந்து யாரும் விலகிக்கொள்ள முடியாது.

மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு முன் கண்ணிவெடிகளை அகற்ற வேண்டிய பாரிய வேலைத் திட்டம் ஒன்றும் உள்ளது. அத்துடன் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் பெண்கள் தொடர்பான அபிவிருத்தி விடயங்களில் முக்கிய கவனம் செலுத்த இருக்கிறோம். இவற்றைவிட யுத்தத்தில் பாதிக்கப்பட்டு தொழில் வாய்ப்புக்களை இழந்தவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவது சம்பந்தமான திட்டங்களை நடைமுறைப்படுத்த கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இம் மூன்று விடயங்களும் ஒஸ்லோ மாநாட்டின் போது கவனத்தில் எடுக்கப்படும்.

கடந்த காலங்களில் அரசாங்கத்திற்கு ஜப்பான் பெருமளவு உதவியை வழங்கியது. தற்போது ஏற்பட்டுள்ள சுமுக நிலையில் வடகிழக்கிற்கான பெருமளவு நிதியை ஜப்பானிய அரசாங்கம் வழங்குவதற்கு முன்வந்துள்ளது. இந்த அடிப்படையில் அமைதி மற்றும் சமாதானத்தை முன்னெடுப்பதிலும் வடக்கு-கிழக்கை மீளக்கட்டியெழுப்புவதிலும் மக்களின் வாழ்வை மேம்படுத்துவதிலும் ஜப்பான் பெரும் பங்கு வகிக்கிறது. இந்த வகையிலேயே ஜப்பானியப் பிரதிநிதிகள் இன்றைய பேச்சுக்களில் கலந்து கொணடனர்.

வடக்கு - கிழக்கில் பூர்வீகமாக வாழ்ந்த தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கான மறுவாழ்வுப் பணிகள் பாகுபாடு இன்றி கருத்திலெடுக்கப்படுமென தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்தார்.

(க,லி)

# அரசாங்கமும் புலிகளுமாக நிதியுதவி கோரவுள்ளனர்

(கிளிநொச்சி)

"ஒஸ்லோவில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தின் போது அரசும் விடுதலைப்புலிகளும் இணைந்து நிதி உதவிக்கான கோரிக்கையை முன்வைக்கவுள்ளோம்" இவ்வாறு விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

நேற்றுக்காலை கிளிநொச்சியில் நடைபெற்ற புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திக்கான உபகுழுக் கூட்டத்தின் முடிவில் செய்தியாளர் மத்தியில் பேசும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். வடக்கு- கிழக்கு அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்விற்கான உபகுழுவின் செயற்பாடுகளுக்கு சர்வதேச சமூகத்திடமிருந்து நிதியுதவியை பெற்றுக் கொள்ளும் விடயத்தில் அரசும் விடுதலைப்புலிகளும் இணைந்து செயற்படத் தீர்மானித்துள்ளோம். யுத்தத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்ற எமது வடக்குக் கிழக்குப் பகுதியை மீள கட்டியெழுப்புவதும், யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவதும் முக்கியமான விடயங்களாகும். இவ்விடயங்கள் பற்றியே இன்று விரிவாக ஆராய்ந்தோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க,லி)

# அபிவிருத்தி நடவடிக்கை ஒருங்கிணைக்க செயலகம்

(கிளிநொச்சி)

வடகிழக்கின் புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை ஒருங்கிணைந்த வகையில் மேற்கொள்வதற்கு செயலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இச்செயலகத்தின் தலைமை அலுவலகம் கிளிநொச்சியில் செயற்படவுள்ளது. இச்செயலகமே வடகிழக்கின் அனைத்து புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை கையாளவிருக்கின்றது.

இச்செயலகத்திற்கென பணிப்பாளர் ஒருவரும் பிரதிப் பணிப்பாளர்கள் இருவரும் நியமிக்கப்படவுள்ளனர். பணிப்பாளர் விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்தும், பிரதிப் பணிப்பாளர்கள் ஒருவர் முஸ்லிம் தரப்பிலிருந்தும், மற்றையவர் அரச தரப்பிலிருந்தும் தெரிவு செய்யப்படவிருக்கின்றனர். இச்செயலகத்தின் செயற்பாடுகள் சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடனும் அனுசரணையுடனும் நடைபெறவிருக்கின்றன.

## புனர்வாழ்வு...

இந்நிதியம் சர்வதேச நாடுகள் பலவற்றைக் கொண்ட அமைப்பாக செயற்படும். வடகிழக்கில் மேற்கொள்ளப் போகின்ற மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு இந்த நிதியத்திலிருந்தே உதவி வழங்கப்படப் போகின்றது. இந்த நிதியம் சர்வதேச சமூகத்தின் கண்காணிப்புடனும் ஆதரவுடனும் செயற்படும். வட-கிழக்கில் இனம் காணப்படுகின்ற புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு இந் நிதியத்திடமிருந்து உதவி வழங்கப்படவிருக்கின்றது.

வட-கிழக்கிற்கான புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திக்கான உபகுழுவிற்கு மேற்படி நிதியம் நேரடியாக நிதியுதவியை வழங்கவிருக்கின்றது என்றும் தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

# கிழக்கில் முதற்தடவையாக பாதுகாப்பு உயர்மட்டக் கூட்டம்

தாய்லாந்துப் பேச்சுவார்த்தை, தீர்மானத்தின் பிரகாரம் அமைக்கப்பட்ட உயர்பாதுகாப்பு வலயம், மீளக குடியேற்றம் தொடர்பான உபகுழுவின் கிழக்கு மாகாணத்துக்கான முதலாவது கூட்டம் இன்று காலை 10.30க்கு மட்டக்களப்பு மாவட்டத்தில சூனியப் பிரதேசத்தில் அமைந்திருக்கும் வவுணதீவு பிரதேச செயலக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

அரசுத்தரப்புப் பிரதிநிதியாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ தலைமையிலும், விடுதலைப்புலிகள் தரப்பில் 9 பிரதிநிதிகள், கேணல் கருணா அம்மான் தலைமையிலும் கலந்து கொள்வதுடன் போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுப் பிரதிநிதிகளும் சமுகமளிப்பார்கள்.இந்தக் கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட உயர் பாதுகாப்பு வலயங்கள், மீள்குடியேற்ற விடயம் தொடர்பாக ஆராயப்பட்டவுள்ளன.

இதேவேளை- உயர்பாதுகாப்பு வலய, மீள்குடியேற்றம் தொடர்பான உபகுழுவின் கூட்டங்கள் எதிர்வரும் வியாழக்கிழமை திருகோணமலையிலும், சனிக்கிழமை அம்பாறை மாவட்டத்திலும் நடைபெறவுள்ளன.

# புலிகளின் குரல் 12வது ஆண்டு நிறைவு

(நமது நிருபர்)

புலிகளின் குரல் வானொலியின் பன்னிரண்டாம் ஆண்டு நினைவு விழா நாளை கிளிநொச்சி மத்திய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நாளை மாலை 4.30 மணிக்கு நடைபெறும் இவ்விழாவில் 'வானோசை' கலை இலக்கியப் போட்டிக்கான சான்றிதழ்களின் வழங்கப்படுவதுடன்,

இசையமைப்பாளர் போராளி செயல்வீரனின் பின்னணி இசையில் 'இன்னிசை விருந்தும்' நடைபெறவுள்ளது.

## மக்கள் மீது...

நிலையத்துக்கு எடுத்துச் சென்றனர். கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட இரு மோட்டார் சைக்கிள்கள் பொலிஸாரால் அடித்து நொருக்கப்பட்டன.

பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் தம்புசேவியர் (42) என்பவர் காலில் காயமடைந்தார். குண்டாந்தடியடியினால், வைரவநாதன் பாலன் (48) சதாசிவம் பத்மலிங்கம் (55) ஆகியோர் காயமடைந்தனர்.

இச்சம்பவங்கள் நடைபெற்ற அதேசமயம், நெடுந்தீவு பிரதேச சபை கட்டிடத்திலும் பிரதேச செயலர் அலுவலகத்திலும் 60 இக்கும் மேற்பட்ட கடற்படையினர் தங்கியிருந்தனர். இவர்களுடன் ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரான மதனராஜன் மற்றும் ஜெகன், நிஷாந்தன் ஆகியோரும் இராணுவச் சீருடையில் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நேற்றைய அசம்பாவிதங்களையடுத்து மதியம் நெடுந்தீவு வந்த போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் சம்பவங்கள் தொடர்பாக பொதுமக்களுடனும் ஈ.பி.டி.பி உறுப்பினர்களுடனும் பேச்சுக்களை நடாத்தினர். கண்காணிப்புக்குழு உறுப்பினர்களுடன் புலிகளின் முக்கியஸ்தர்களும் வந்திருந்தனர். நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது. ஐந்து மணிநேரமாக நீடித்த இச்சந்திப்பில் ஈ.பி.டி.பி சார்பில் ஜெகன், காந்தன், நிஷாந்தன் ஆகியோர் பங்குபற்றினர். பொதுமக்கள் சார்பில் கமலநாதன், ஞானராசா, கிருபாகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பேச்சுக்களின்போது, நெடுந் தீவிலிருந்து பகுதி பகுதியாகவே வெளியேறுவோம் என ஈ.பி.டி.பி தரப்பில் கூறப்பட்டது. எனினும் வந்த 43 பேரும ஒரேயடியாகவே வெளி யேறிவிட வேண்டும் என மக்கள் பிரதிநிதிகள் கேட்டுக்கொண்டனர். பேச்சுக்களில் முடிவு ஏதும் எட்டப்படாத நிலையில் பேச்சுக்களை விட்டு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் வெளியேறினர். ஈ.பி.டி.பி பதிவு செய்யப்பட்ட அரசியல் அமைப்பு என்பதால் எல்லாத் தரப்புடனும் பேச்சுக்கள் நடத்துகின்றோம். நாளையும் (இன்று) நெடுந்தீவு சென்று பேசவுள்ளோம் என அவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் - நெடுந்தீவு சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று வேலணை வங்களாவடிச் சந்தியிலும் ஊர்காவற்றுறையிலும் மக்கள் மறியல் போராட்டங்களை நடத்தியுள்ளனர்.

(112, 113)

நமது ஈழநாடு க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை

மாபெரும் முன்னோடிக் கருத்தரங்கு - 2002

இன்று

யா/வேம்படி மகளிர் கல்லூரியில்

காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை

ஆறு அமர்வுகளாக நடைபெறும்.

இக்கருத்தரங்கில் பங்குபற்றிப் பயன்பெறுமாறு பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களை மகிழ்வுடன் வரவேற்கிறோம்.

அனுசரணை:-

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி

மக்கள் வங்கியின் மாணவர் மலர்ச்சி (சிசு உதான) கணக்கில் இணைந்து நீங்களும் பயன்பெறுவீர்.

இதோ உங்கள் வாழ்க்கைக் கனவுகளை கையகப்படுத்திக் கொள்ளுங்கள்



உலகத் தரம் வாய்ந்த IBM, Compaq நிறுவனங்களின் PI, PII கணனிகள் உங்களிற்காகவே யாழ் மண்ணில்

ரூபாய் 10,000/= லிருந்து

முதல் கையிருப்பிற்கு 6 மாத உத்தரவாதம்

For further details
STP Your Partner in IT Solutions
T.P 2222674 54A, Palaly Road, Kantharmadam

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 19.11.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.